அபிநவ பத்திரிகை.

ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

பத்திராதிபர்கள். { கு. ரா. ஸ்ரீநிவாஸ ஐயங்கார், பி. ஏ.,
ஙா. ராமாநுஜாசாரியர், எம். ஏ, எல். டி.

புத்தகம் 1.] அக்டோபர்மீ 30உ [சஞ்சிகை ௪.

சூசிபத்திரம்.

ம்ருச்சகடிகை	...டி. எஸ். ஸ்ரீநிவாஸ ஐயங்கார், பி. ஏ,	121
சுதவ்ருக்ஷம்	...கு. ரா ஸ்ரீநிவாஸ ஐயங்கார், பி. ஏ.	137
ஜ்யோதிசாஸ்திரம்	...க. அரங்காசாரியர், எம் ஏ, எல் டி.	141
சரீரகசாஸ்திரம்	...டி. ஏ. கோபீநாதராவ், எம். ஏ.,	145
பௌத்தமதமும் வேதாந்தமும்.	தி. ஈ. ஸ்ரீநிவாஸாசாரியரவர்கள்	149
நூற்றெட்டுத் திருப்பதிகள்	ம ஸ்ரீநிவாஸ ஐயங்கார்	154
தாதாபாய் நௌரோஜீ.	ரா. ராஜமையங்கார், பி. ஏ.,	165
வியாபாரம்.	...கிருஷ்ணசாமி ஐயர், பி. ஏ.,	174

சென்னை:

அபிநவ பத்திரிகை ஆபீஸ்,

85, நாராயணமுதலி வீதி.

1902

வருஷ சந்தா ரூ. 3-0-0.] [தனிப்பிரதி ரூ. 0-4-0.



தாதாபாய் நௌரோஜீ.

சுதவ்ருக்ஷம்.

அத்தியாயம். 6

மிகுந்த மனக்கவலை.

நான் இவ்விதம் யோசித்துக்கொண் டிருக்கையில், தபால்கா ரன் மாடப்படியின் மேல் நின்றுகொண்டு ராமானுஜாசாரி! ராமானு ஜாசாரி!! என்று கூப்பிட்டான். உடனே எனது மனத்திருந்த எண் ணங்களெல்லாம் பறந்து போய்விட்டன. எனக்கு எப்பொழுதும் ஊரிலிருந்து ஏதேனும் கடிதம்வந்தால் இவ்விதத் தொந்தரவுதான். ஆயினும் வந்துவிட்டது. இனி என்னசெய்யலாம்? கடிதத்தை வாங் கினேன். பிரித்துப் பார்த்தேன். பின்வருமாறு எழுதியிருந்தது.

"சிரஞ்சீவி ராமானுஜனுக்கு அநேக ஆசீர்வாதம்; க்ஷேமம் க்ஷே மத்திற்கு எழுதியனுப்பவும். நீ சென்னைசென்று 45-நாட்களாயின. நீ எனக்கொன்றும் எழுதவேயில்லை. அதற்குக்காரணம் என்ன? நீ எங்களையெல்லாம் அலக்ஷியம் செய்கிறாயா? அல்லது வேலைத் தொந்தரவினால் சும்மாவிருந்து விட்டாயா? இவை யெல்லாவற்றை யும் பற்றி நீ எனக்கு விவரமாய் எழுதவேண்டியது.

உனக்கு உடம்பு ஒன்று மில்லாமல் சௌக்கியமாயிருந்து கொண்டிருக்கிறாயா? உன் மனைவியை நான் அவள் பிறந்தவீட்டி னின்றும் நேற்றுத்தான் அழைத்து வந்தேன். வீட்டில் எல்லாரும் சௌக்கியமாய் இருக்கிறார்கள். ஆனால் எனக்குச்சில தொந்தரவுகள் இருக்கின்றன. நீ அவற்றைப்பற்றி கவனியாதிருப்பது சரியன்று' நீ உடனே புறப்பட்டு வரவேண்டும். உனது படிப்பு எந்நிலையில் இருக் கிறது. நீ இந்தவருஷடம் எம். ஏ பரீக்ஷைக்குப் போகிறாயா? என் றுகப்படி. எக்காரியமிருந்தாலும் நீ இங்கு ஒரு தடவை வந்துவிட் டுப் போகவேண்டும்.

வேணும்
ஆசீர்வாதம்.
ரங்காசாரி.

என் தகப்பனார் கட்டளைப்படி, நான் ஊர்போய்ச்சேர்ந்தேன். ஊருக்குப்போய்த் திரும்பி வந்ததும் எனது மனம் நிரம்பவும் மாறிற்று. எதுகாரண மென்று என்னைக் கேட்டாற் சொல்லமுடியாது. நான் வீட்டுக்குப் போயிருந்தபோது என்னையணுகிய அநேக கவலைகள் என்னைக் குடும்பத்தண்டை நெருங்குவதே சரியன்றென்பதை வற்புறுத்திற்று. மற்றையகஷ்டங்கள் தாமிருக்கட்டும். எல்லாவற்றையும் விட்டுவிட்டு நானும் எனது மனைவியுங்கூடிச் சுகித்திருக்கலா மென்றாலோ. ஆ! அவ் வெண்ணமே வேண்டாம். நான் எனக்கு, "எனது அகமுடையாள்" எனப்பிறர் கூப்பிட்டழைக்கு மவளை மணம் புரிவித்தபொழுதே வேண்டாம் வேண்டாம் என்றேனே. அப்பொழுது என்னைப்பயமுறுத்தி எனக்கு அப்பெண்ணை மணம்புரிவித்தார்கள். எனக்குக் கல்யாணம் செய்துவைத்த பொழுது பிறர் குதூகலங்கொண்டாடினார்களே யன்றி, நான் துக்கக்கடலிலாழ்ந்திருந்தேன். ஏன் அழுகிறாய்? என்று அநேகர் என்னைக்கேட்டதற்கு கண்ணில் தூளிவிழுந்ததென்றும், புகை கண்ணில் வீசிற்றென்றும் சொன்னேன். நாளாக நாளாக நமக்குக் கிடைத்ததை வைத்துக்கொண்டு சந்தோஷமடையலா மென்றிருந்தேன் இனி என்னால் முடியவில்லை. நான் என்னசெய்வேன்? எனக்குமிருந்த மனக்குழப்பமாய்ப் போய்விட்டது. இனி நான் என்னசெய்வது? ஒருமாதம் நான் மனைவியுடன்கூடவிருப்பேனாகில நான் பித்தம்பிடித்தவனாவேனென எனக்குத் தோற்றிற்று. அதனால் என்னலாபம் எனக்குவந்தாலும், ஏதோ அவளைப்பார்த்தவுடன் எனக்கு ஒருவிதமான வெறுப்புஉண்டாகின்றதே! நான் விரும்பக்கூடாத ஒருத்தியை எனக்கு மணமபுரிவித்து விட்டார்களே! என்னசெய்வேன்! எனக்கு இரண்டுவழிகள் உண்டு. அவை இரண்டனுள் நான் ஏதேனும் ஒரு காரியஞ்செய்யலாம். இரண்டும் என் மனத்திற்குப் பிடித்தவையல்ல. ஆயினும் அவ்விரண்டு வழிகளைத்தவிர எனக்கு வேறு நடந்துகொள்ளும் வழி புலப்படவில்லை. நான் என் மனைவியுடன் கூடியிருக்கவேண்டுமானால், எனது ஆயுள்முழுதும் எனறைக்கும் மனம் புழுங்கிக்கொண்டிருக்கவேண்டும். அல்லது, அவளைவிட்டுப் பிரிந்திருக்கவேண்டும்; அஃதாவது ஒரு குற்றமுஞ் செய்யாத வொருத்தியை, என்னைத்தவிர வேறுகதியற்ற வொருத்தியை, என்னுடன்கூடவிரு

ந்து மிக்குயர்ந்த நிலையிலிருக்கலாமென்று சொப்பனங்கண்டுகொண்டிருக்குமொருவளை நான் சந்தியில் விடுபவனாவேன். நான் எதைச்செய்வது! 'தெய்வமே!! தெய்வமே!! என்ன செய்வேன்?

இப்பொழுது அக்கேள்வியை வேறுவிதமாகக் கொள்ளலாம்? உனது சுகத்தைத் தேடிக்கொள்ளுவாயோ? அல்லது பிறர்சுகத்தைத் தேடுவாயோ? எனக்குப் பித்தம் பிடித்தனால், நான் என்ன செய்யமுடியும்? எவ்வளவோ நான் எனது தேசத்திற்குச்செய்யமுடியும். அவையனைத்தையும் நான்எப்படியாவதுசெய்து முடிப்பதாக நிச்சயித்திருக்கிறேன். நான் இக்கஷ்டத்தை வைத்துக் கொண்டால் கண்டிப்பாய்ப் பித்தம் பிடித்தவனாவேன். நான் சம்சாரத்தை விட்டிருந்தாலோ, கொஞ்சமேனும் தடையின்றி செய்துமுடிப்பேன்.

அவையெல்லாமிருக்கட்டும். என்னை நம்பியவளை நான் எப்படிச் சந்தியில்விடுவது? என்னைத்தவிர வேறுகதியோ சிறிதுமில்லை. வேறு யாரையேனும் அவள் மணஞ்செய்துகொள்ள முடியுமா? சீ! முடியாது. அப்படியிருக்க நான் செய்வது சரியாகுமா? சரியாகாதுதான். நீ அவளை விட்டுவிட்டுப்போகிறாயே? அவள் இனி என்ன செய்வது? அவள் என்ன குற்றஞ்செய்தாள்? என்று யாரேனும் என்னைக் கேட்பாரேயாகில் அதற்கு நான் சொல்லுவது என்ன? "அவளுடன்கூட என்னாலிருக்கமுடியாது" என்று நான், சொல்லவேண்டும். "அதை இனிச் செல்லுவதனா லுண்டாயபய னென?" என்று பதில்வரும் எனக்கு ஒன்றும் தெரியவில்லையே? எப்படியாயினும் என்னால் எனது மனைவியுடன் இருக்கமுடியாது. அவள் ஒன்றுங் குற்றஞ்செய்யவில்லைதான். அவள் என்மேலும் மிகுந்த அன்புகொண்டவளாகவே யிருக்கலாம். நான் என்ன செய்வது? என் மனம் அவளுடனிருக்கப்பொறாது. எனது அந்தரங்கத்தில் அவளைக்கண்டு நான் பரிதபிக்கிறேன். அவள் என்னை மறப்பதற்கு என்னவேண்டுமானாலும் கொடுப்பேன். யார் எது சொன்னாலுஞ் சரி. இனி நான் செய்வது என்ன? நான் இப்படியே சும்மாவிருந்துவிடலாமா? சீ! சீ! எனது மனைவியே, நான் அவளைச் சீக்கிரத்தில்வந்து கூடுவேனென்றன்றோ நினைப்பாள். இப்படி அவள் வெகு நாட்களாக என்னை எதிர்பார்த்துக்கொண்டிருக்கும்

பொழுதெல்லாம் சும்மாவிருந்துவிட்டு வெகு நாட்களான பிறகு "இனி உன்னுடன்கூட விருக்க என்னால்முடியாது" என்று சொல்லுவேனாகில், நான் மோசக்காரனையன்றோ மதிக்கப்படுவேன்! ஆகையின் இப்பொழுதே எனது உறவினர்களிடத்தும் எனது மனைவியது உறவினர் முதலியோரிடத்தும் சொல்லிவிடலாமா?

கு. ரா. ஸ்ரீநிவாஸ ஐயங்கார்.

ஓஷதிசாஸ்திரம்.

II

வேர்கள் சாதாரணமாய் வெளிச்சத்தை தவிர்த்து, கீழ்நோக்கியே பூமியினுட் பிரவேசித்து அங்கு கிளைக்கும். புதியகிளைகளின் நுனியில் உண்டாகும் சிறு சிறு வேர் உரோமங்கள் வழியாகத்தான், பூமியிலுள்ள ஜலமானது செடியினுட் செல்லுகிறது என்று முன்னமே சொலலப்பட்டது. இவ்ரோமங்களைச் சுற்றிலும் சிறு சிறு கல்துணுக்கைகள் ஆங்காங்கு ஒட்டிக்கொண்டிருக்கும். இச் கல் துணிக்கைகளி னிடையிற் காற்றிருக்கும். இவைகளை ஒட்டினாற் போல ஜலம் கொஞ்ச மிருக்கும். இவ்வண்ணம் இடையிடையில் காற்றில்லாமற் போனால் வேர்கள் அழுகிப்போகும்; வேர் உரோமங்கள் தாராளமாய் உற்பத்தியாகா; ஜலம் உட்செல்லுதலில்லாமல் செடி மரணமடையும். இதற்காகத்தான், தொட்டிகளில் செடிகள் வைத்தால் அத்தொட்டியிற் கொட்டும் ஜலமானது தேக்கமாய் நில்லாமல் வடிந்து விடும்படி செய்யவேண்டும்.

வேர்களுக்குத்தம்மை சுற்றிலுமிருக்கும் கற்களைக்கரைக்குஞ் சக்தியுண்டு. ஆகாரசேகரத்திற்கு வேண்டிய சில உப்புகள் பூமியில் கட்டியான ரூபமாக விருக்கிறபடியால், செடிக்கு உதவவேண்டியதானால், ஜலத்தில் கரைந்தாற்றா னுதவும். செடிக்குள் பிரவேசிப்பதற்கு வஸ்துக்கள் ஜலரூபமாகவாவது, வாயுரூபமாகவாவது இருக்கவேண்டும்; சுயரூபத்தோடிருந்தால், உட்செல்லாது. ஆகையினால்தான், வேர்கள் இவ்வித வஸ்துக்களைக் கரைக்கும் சக்திபெற்றிருக்கிறது. இவற்றைக் கரைத்து, பூமியிலிருக்கும் ஜலத்தில் மிச்ரப்படுத்தி உரோமங்கள் வழியாய் உட்கொள்ளுகின்றன.

இந்த அரிக்குஞ் சக்தி வேர்களுக்கு உண்டு என்னும் விஷயத்தை வெகு சுலபமாய் நிர்தாரணம் செய்யலாம். ஒரு சலவைக் கல் அல்லது வெண் கற்பலகையை, ஒரு பூந்தொட்டியின் அடியில் புதைத்துவைத்து அதன் மேல் மண்ணைக் கொட்டி செடியை நட்டு விருத்திசெய்து, சில நாட்களுக்குப் பின்பு அச்செடியின் அடியிலி

ருக்கும் வெண் கற்பலகையை யெடுத்துப் பரிசோதித்தால், வேர் ஊன்றியிருந்த இடங்களெல்லாம் பள்ளமாக விருக்கும். இதனால் வேர்களுக்கு அரிக்கும் சக்தி உண்டென்று விசதமாகத் தெரிய வருகிறது.

இதுகாறும், நாம் வேர்களின் தொழிலைப்பற்றி கவனித்தோம். இனி அவைகளில்பல இனங்களுண்டாவென்பதையும, அவைகளின் உற்பத்தி ஸ்தானங்களையும்பற்றி யோசிப்போம். முளைகளிலுண்டாகும்கம்பிபோன்றும் நீண்டவித்தின்வேற்பாகமானதுதான், உயிர் அல்லது நிலைவேராக வளர்கிறது. சில செடிகளில் இவ்வேர் வளராமல் இளவேர்கள் மாத்திரம் வளர்வதுண்டு. இளவேர்கள் உயிர்வேரின் நாலாபக்கங்களிலிருந்துதான் கிளம்பி வளர்கின்றன; மேலும் இவை நாலாபக்கங்களிலும் சென்றாலும், உயிர் வேரின்பேரில், கிரமமாக வரிசைவரிசையாகத்காணிருக்கும். இவைகளைத் தகைமை* வேர்கள் என்று சொல்லலாம். புல் முதலியவற்றைப்போன்ற செடிகளின் வேர்களும் பல்வகை ஆலமரங்களின்விழுதுகளும் தகைமை வேர்களல்ல. ஏனெனில் இவை தண்டிலிருந்து கிளம்பிவளர்கின்றன இவற்றை இடைவேர்கள் ‡ என்று சொல்லலாம். தண்டு வேர்கள் என்று சொல்லலாம் என்றாலோ, இலைக்கள்ளி பெகோனியா இவைகளின் இலைகளை அறுத்துத்தரையில் அழுத்தி வைத்தால், மேற்புறத்திலிருந்து இலைமொட்டுகளும், அடியிலிருந்து இவ்வித வேர்களுமுண்டாகின்றன. சிலமரங்களின் கிளைகளைவெட்டித்தரையில புதைத்துவைத்திருந்தால், அடிப்புறத்தில் உண்டாகும் வேற்களும் இவ்விதமானவைகளே.

வெற்றிலைக்கொடி, மிளகுகொடி இவை மரங்களின்பேரில் தாவி, ஒட்டிக்கொண்டு வளர்ந்துவருகிறது. அங்ஙனம் ஒட்டிக் கொண்டிருப்பது, கணுக்களி லுண்டாகும் இடைவேர்களால்தான் இவ்விருசெடிகளுக்குப் பூமியிலும் வேர் இருக்கின்றன. சில மரங் களின்பேரில், சம்பந்தமின்றி, ஒட்டிக்கொண்டு வளரும் செடிகள் சில உள. இம்மாதிரியானவைகளின் வேர்கள் வெளியில் நான்கு புறங்களிலும் படர்ந்திருக்கும். இவை, உயரத் தம்மைச் சுற்றியிருக்குங் காற்றிலிருந்து ஆவிரூபமாயிருக்கும் ஜலத்தை ஆகரிஷிக்

* Natural ‡ adventitious.

கின்றன. உப்பு முதலிய பதார்த்தங்களைக், காற்றினால் நாலாபக்கங்களிலும் பரந்தோடும் தூசியிலிருந்து பெற்றுக்கொள்ளும்.

பில்லுருவிஎன்னுஞ்செடிக்கும் இதைப்போன்றவைகளுக்கும் ஓர் தன்மைத்தான வேர்கள் உள. இச்செடிகள் மரங்களின் கிளைகளில் ஒட்டிக்கொண்டுதான் வளருகின்றன. இவற்றிற்கு பூமி சம்பந்தமே கிடையாது. வேர்கள் தாம் படரவேண்டிய செடியின் கிளைகளில், பட்டையின் வழியாயுட்சென்று உள்ளே இருக்கும் பாகங்களுடன் கலந்து ஒன்றாய்விடுகின்றன. தங்கள் ஆகார பதார்த்தத்தைச் செய்துகொள்ளவேண்டிய வஸ்துக்களாகிய உப்புகள், ஜலம், இவற்றைப் பூமியிலிருந்து ஆகர்ஷிப்பதற்கு பதிலாக தாம் படர்ந்திருக்கும் செடிகள் தம் உபயோகார்த்தம் சேகரித்த பதார்த்தங்களை, அச்செடிக்குப் போகும் வழியில் குறுக்கே நின்று, உபயோகப்படுத்திக்கொள்ளுகின்றன.

முள்ளங்கி, வள்ளி, ஆள்வள்ளி இச்செடிகளின் வேர்கள் மிகவும் பெருத்துத் தடித்திருக்கின்றன. இவற்றை நாம் கிழங்குகள் என்கிறோம் அல்லவா? இவை செடியின் நிலைவேர்களே ஆகாரபதார்த்தம் சேகரித்து வேரில் வைக்கப்பட்டிருப்பதால், இவ்விதம் தடித்தும் பெருத்தும் இருக்கின்றன. இவ்விதமாய்க் கிழங்குள்ள செடிகளில் சிலவகை பெரும்பாலும், இரண்டு பருவம் ஜீவித்திருக்கும், முதற்பருவத்தில், நன்றாய் வளர்ந்து, ஆகார பதார்த்தத்தை அதிகமாய் உற்பத்திசெய்து வேராகிய களஞ்சியத்தில் சேர்த்துவைக்கும். இரண்டாவது பருவத்தில் இப்படிச் சேர்க்கப்பட்டவற்றை உபயோகப் படுத்திக்கொண்டு புஷ்பித்துக் காய்த்து இறக்கும்.

கிளையானது உயர்ந்து மேல்நோக்கியே வளர்ந்துவரும். இக்கிளையின் பாகங்கள், தண்டும் இலைகளுமென்றும், இலைகள் தண்டினின்றும் கிளம்பிவரும் பாகம், கணுவென்றும் முன்னமே சொல்லப்பட்டிருக்கிறது. தண்டு, இலையைத் தாங்கிக்கொண்டிருப்பதுடன்கூட புஷ்பம், கனி இவற்றையும் வகிக்கின்றது. வேரையும் இலையையும் சேர்க்கிறது தண்டுதான்.

பூமியிலிருந்து ஜலமானது செடியினுட் சதா உட்சென்றுகொண்டே இருக்கும். தனித்தனி உரோமங்களின் வழியாய்ச்சென்றும்

ஜலம் கொஞ்சமாயினும், பலதுளி பெருவெள்ளம் என்பதுபோல், வேர் உரோம சமூகத்தின்வழி யுட்செல்லும் ஜலம் அதிகம் தானே? மேலும் மேலும் ஜலம் வந்துகொண்டே யிருப்பதால், முன் உட்சென்றதானது பின்னே மற்றொன்று உட்பிரவேசித்தலால் உயரத் தள்ளப்படுகிறது. மறுபடியும் உட்புகும் ஜலத்தால் இன்னொருதரம் தள்ளப்படும். இவ்விதமாய் தள்ளப்பட்டு, ஜலமானது, வேரிலிருந்து தண்டின்வழியாய் இலைகளுக்குப்போய்ச்சேரும். இப்படிச்செடி முழுவதும் ஜலம்நிரைந்துவிட்டால் அப்புறம்ஜலம் உட்செல்லாதே. சுபாவத்தில் செடிகளில் ஜலம் பூர்ணமாய் நிரைகிறதே யில்லை. இலைகளிலும் தண்டின் வெளிப்புறத்திலுமுள்ள ஜலம், சுற்றிலும் காற்று வீசுவதினாலும், சூரிய வெப்பத்தினாலும் எப்பொழுதும் ஆவியாய் வெளிப்பட்டுக்கொண்டே யிருக்கும். ஆகையால் எப்போதும் இலைகளுக்கு ஜலம் வேண்டியதாகவே இருக்கும். வேர்களில் எப்பொழுதும் ஜலம் உட்சென்றுகொண் டிருப்பதால், இலைகளுக்கும் ஜலம் போய்க்கொண்டே யிருக்கும்.

செடிக்குள் இவ்விதமாய் விசேஷஜலம் ஏன் செல்லவேண்டும்? காரணமென்ன? இலையையடையும் ஜலத்தில், கரைந்திருக்கும் உப்பானது வெகுகொஞ்சம். உப்பு 1/2 அல்லது 1 பங்கும் ஜலம் 1000 பங்குமாகவிருக்கும். ஆனதுபற்றி அடிக்கடி ஜலம்வந்துக்கொண்டும், ஆவிரூபமாக ஜலம் வெளிப்பட்டுக்கொண்டு மிருந்தால் தான், இலையின் தொழிலிற்கு வேண்டிய வவ்வளவு சேகரமாகும். ஆவிரூபமாக ஜலம் வெளியாய்விடுதல், அடிபாகங்களி லிருந்து மறுபடியும் ஜலம் வரச்செய்யும சாதனங்களில் முக்கியமானது.

இலைகளில் முக்கியமான பாகம் இலைதான். இவை தண்டின் நாலாபக்கங்களிலும கிளம்பிவளர்ந்து வருகின்றன. எல்லாச்செடிகளிலும் இலைகளானது விரிந்தும் மெல்லியதாயு மிருக்கின்றன வல்லவா? இதனுடன், இவைகளின் பரப்பும் அதிகம். இவ்விதமாய் எல்லா விலைகளுமிருப்பதால், தம்வேலையை நன்றாகச்செய்ய இவ்விரிவான நிலையும, விஸ்தீரணமான பரப்பும் வெகு அவசியம் என்று நாம் ஊகிக்கலாம்.

சில செடிகளி னிலைகளில், நாம் இரண்டு பாகங்களைக் காணலாம். இவை இலையும் அதன் காம்புமே. வெண்டை, புடலை இச்செடிகளின் இலைகள் காம்புள்ளவைகள் தாம். கடுகு, அபினிச செடி, பிரமதண்டு செடி இவற்றின் இலைகள் காமபற்றவைகள்,

க. அரங்காசாரியர்.

NOTICE.

The Manager begs to be excused for the unavoidable delay caused by the destruction of the printed formes during the heavy rains. He hopes to be very regular in future.

பௌத்தமதமும் வேதாந்தமும்.

———(*)———

பௌத்தமதமென்பது நாஸ்திக மதமென்று அனேகருடைய அபிப்பிராயம். உண்மையில் விசாரிக்கையில், அப்படிச்சொல்லுவதற்குப் போதுமான நிமித்தமொன்றுமில்லை. நாஸ்திக மதங்களெல்லாம் நாம் கண்டனமட்டுமே உண்மை; காணாதனவெல்லாம் பொய்; சரீரத்தைவிட வேறு ஆத்மாவென்பது கிடையாது; என்று சொல்லிப் பரலோகத்தையும் அதைச்சேர்ந்த புருஷார்த்தத்தையும் நிஷேதிக்கும். அதற்கு எதிர்மறையாக, நமக்குத்தோற்றும் வஸ்துக்களையும், அவற்றின் அனுபவங்களையும், அநித்தியமாகவும துக்கரூபமாகவும் எடுத்துக்காட்டுகிறமதம், தத்துவதரிசனமுள்ள மதமென்றே, ஆஸ்திக மதங்களைக் கொள்ளுவதுபோல் கொள்ளத்தகுதியுள்ளது. இதனால் மட்டுமே புத்தரை மகாவிஷ்ணுவின் தசாவதாரங்களில் ஒன்றாகக் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. ஜய தேவருடைய கீதகோவிந்தத்தில் தசாவதாரங்களைச் சேர்த்துச்சொல்லுகிறமுதல் பிரபந்தத்தினுடைய கடைசி சலோகத்தில் அவதாரங்களின் பெயர்களைக் குறிப்பிடாது முக்கியமாகிய குணத்தைக் கொண்டே ஒவ்வொரு அவதாரத்தையும் தெரிவித்துவருகிற கவியானவர், தயை செய்வதென்கிற ஒரு குணத்தையே முன்னிட்டுத் தெரிவிபபதனால், பகவானுக்கு தயாகுணம் சகஜமாயிருந்தபோதிலும், அதை யொன்றையே விசேஷமாகப் பாராட்டினது புத்தாவதாரத்திலேதா னென்று வெளிப்படையாய்த் தெரியவருகிறது. அதற்குத் தக்கபடி "அஹிம்ஸாபரமோதர்ம:" என்பது புத்தருடைய பரமோபதேசமென்று லோகப்பிரஸித்தம். வேதத்திலே "நஹிம்ஸ்யாத்ஸர்வா பூதாநி" (ஒருப்பிராணியையும் ஹிம்ஸை செய்யக்கூடாது), என்பதோடு இவருடைய பரமோபதேசம் ஒத்ததாகவே யிருக்கிறது. ஆனால் அஸுரமோகனார்த்தமாக ஸ்ரீமஹா விஷ்ணு புத்தாவதாரமெடுத்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அது உசிதமாகுமா? சாஸ்

திரங்களில் ஈசுவரனை ஸர்வஞ்ஞனாகவும், ஸத்திய ரூபனாகவும், சொல்
லியிருப்பதினால் தானே அவருடைய உபதேசத்தை எல்லாவற்றிற்
கும் மேலாக கிரகிக்கிறோம்? அவரே யாரையாகிலும் மோசம் செய்
யும்படியான உபதேசத்தைக் கொடுக்கும் பக்ஷத்தில் நம்பிக்கை
எப்படியுண்டாகும்? அதனோடு, சன்மார்க்கத்தி லிருப்பவர்கள்,
வேதசாஸ்திரங்களையும், ஸதாசாரியர்களையும் ஆச்ரயித்து, தங்கள்
ஹிதங்களைச் சரியாகத் தெரிந்துகொண்டு நடப்பது அவருடைய ஸ்வ
தர்மமானதினால், அவர்கள் விஷயமாக சிரமப்படவேண்டியது அவ
சியமன்று; துர்மார்க்கர்களை மென்மேலும் கெட்டுப் போகாமல்
நல்வழியில் திருப்பவேண்டியதுதான் லோகநாதனா யிருக்கிறவரு
டைய கருணையிற் படவேண்டிய விஷயம். அசுரர்களைத் திருந்
தும்படி செய்வதற்கு ஈசுவரன் நினைத்தால் முடியும். இப்படியிரு
க்க, ஈசுவரனே அஸுரர்களை மோசம் செய்கிற உபதேசம் கொடுத்
தாரென்பது எவ்வளவும் சரியான விஷயமன்று. ஆனால் அதனுடைய
தத்வத்தை விசாரித்துப் பார்த்தோமாகில், இந்த ஆக்ஷேபம் தனக்
குத்தானே சாந்தமாய்விடும்.

உலகத்தில் எப்படிப் பூஸாரத்திற்குத் தக்கபடி பயிர்செய்வது
சரியான முறையோ, அப்படியே சிஷ்யனுடைய நிலைக்குத்தக்கபடி
உபதேசம்கொடுப்பதுதான பெரியோர்களின் இயல்பு. சாதாரண
மாக, தன்னை அடுத்தவன்மேல் மிகுந்த கோபங்கொண்ட ஒரு
எஜமானனிடத்தில், அந்த அடுத்தவனைப்பற்றி சிபார்சுசெய்யப்
போகும் மத்தியஸ்தன், உண்மையாக அந்த எஜமானனிடத்திலு
ள்ள முரட்டுத்தனத்தையும், நிஷ்காரணமாகக் கோபிக்கும் சுபாவத்
தையும் எடுத்துரைப்பானாகில், அது அந்த அடிமைக்கு முன்னிருந்
ததைவிட அதிக நஷ்டத்தை விளைவிப்பதைத் தவிர வேறென்ன பிர
யோஜனத்தை யுண்டாக்கும்? அவனே அடிமையின் தப்பு மிக
வும் பிசகானதென்று சொல்லி, எஜமானன் நற்குணத்தை மேலா
கப்பாராட்டி கோபத்தைத் தணித்தால், எஜமானன் அடிமையாகிய
அவ்விருவருக்கும் எவ்வளவு க்ஷேமத்தை அது தரும்? முரட்டுத்த
னம் செய்கிற குதிரையை அதன்வழி விடக்கூடாதென்று பிடிவாத
மாகத் தன்மனம்போலே இழுத்து, அதிக முர்டாகச் செய்பவன்
தெரியாதவனென்றும், அதன் மனம்போல்விட்டு அதைத் தன்னிஷ்
டப்படி இணங்கும்படி செய்பவன், அசுவ ஹிருதயம் தெரிந்தவ

னென்றும் வியவஹரிக்கிறோ மல்லவா? இதை யனுசரித்துத் தான் காலதேசங்களைக் கவனித்துச் செய்யும் செய்கையே பயன் படும். அப்படிக் கவனிப்பவரே பெரியோர்களென்று நிச்சயிக்க ப்பட்டிருக்கிறது. சிஷ்யனுடைய புத்திதான் தேசமாகவும், உபதே சத்திற்குமுந்திய அந்த புத்தியின்நிலைமையே காலமாகவும் இருக்கி ன்றன உபதேசமென்பது தெரியாததும், தெரியவேண்டியதும், எளிதிற் தெளியக்கூடியதுமான விஷயத்தைத் தெரிவிப்பதே. தெ ரிந்த விஷயத்தையே திருப்பிச்சொல்வது பிஷ்டபேஷணம்போல் கேட்பவர்களுக்கு அச்ரத்தையை உண்டாக்கும். ஒருவன் தெரி ந்துகொள்வதினால் லாபமில்லாமலும் தீங்குவரும்படியாகவு மிருக் கிற உபதேசங்கொடுப்பது உபதேசிக்கிறவனுடைய மூடத்தனத் தையும் வஞ்சகத்தையும் தெரிவிக்கும். தெரியக்கூடாத ஒருவிஷயத் தைச்சொல்வானாகில், இரண்டொரு நிமிஷங்களுக்குமேற்பட்டு சிஷ் யன்அந்த ஆசாரியனிடத்தில் சேர்ந்திருக்கமாட்டான். மரமேறுகி றவன் நிற்குங் கிளைக்கு அடுத்த மேற்கிளையில் ஏறுவதுபோலவும், மாடமேறுகிறவன் நிற்கும்படிக்கு அடுத்த மேற்படியில் அடிவைப் பதுபோலவும், சிஷ்யனுடைய புத்திக்கு அதுநிற்கும் நிலைமைக்கு அடுத்த மேலநிலைமை காட்டுவதைத்தான் உபதேசமென்று சொல் லலாம். புத்தருடைய காலத்தில் உலகமிருந்த நிலையைப்பற்றிக் கவனிப்போமாகில் ஜந்து ஹிம்சை பலகாரணங்களினாலும் ஸர்வ சா தாரணமாக நடந்துவந்திருக்கவேண்டுமென்று ஊகிக்கலாம். அனே க தர்மங்களிருக்கையில், அஹிம்ஸை முக்கியதர்மமென்று கைக்கொ ண்டதற்கு இதுதான் காரணமாயிருக்கவேண்டும். வேதத்திலும் ஒரு பிராணியையும் ஹிம்ஸைசெய்யக்கூடாதென்று நிஷேதமிரு ந்தபோதிலும் அஹிம்ஸை ப்ராஹ்மணனுக்குள்ள லக்ஷணங் களுக்குள் முதன்மையாக இதிஹாஸ புராணங்களில் சொல் லப்பட் டிருந்தபோதிலும், யக்ஞம் முதலியவற்றில் பசுவதம் விஹிதமாக நடந்துவந்திருந்தது. அது ஹிம்ஸையாக விருந்தபோ திலும், மாம்ஸம் *ஆகாரமாக எடுத்துக்கொள்ளப்பட்ட காலத்தில் ஒரு மனுஷ்யன் தான் என்ன ஆகாரம் தனக்குப்பிரியமாக எடுத் துக்கொள்ளுகிறானோ அதையே, அவன் தன் தேவதைக்கும் நிவே தனம் செய்யவேண்டும் என்னும் விதியை யனுசரித்து, தேவதார்த்

* யதன்னப் புருஷோபவதி.

தமாக யெக்ஞத்தில் பசுவதம் விதிக்கப்பட்டிருந்தது. அதனால் தின ப்படி ஆகாரமா யிருந்தால் நேரிடக்கூடிய பசுஹிம்ஸைகளை ஒது க்கி நிவர்த்திசெய்வதற்காகவே யெக்ஞத்தில் விதிக்கப்பட்டது. திரவியங்களும் காலதேசங்களும், மனுஷ்ய உதவிகளும், சேகரித்து யெக்ஞம் செய்வது வெகுதுர்லபமா யிருக்கும். அதிலும் கணக் காய் விதிக்கப்பட்டுள்ள பசுவைத்தவிர, அதிகம் சேர்க்கக்கூடாது, என்கிற நியமங்களினால் ஹிம்சை குறைக்கப்பட்டுவந்திருக்கிறது. மேற்கூறியதுபோல் மாம்ஸாஹாரம் வழங்குகிற காலத்தில், மாம்ஸ த்தை முழுதும் விடும்படி முதலெடுப்பிலேயே ஒருவனுபதேசித் தால், அந்த வுபதேசம் பயன் படாது. இதனாலே ராக ப்ராப்த விஷயங்களில், அதாவது ஜனங்கள் தமக்குத்தாமே விரும்பி நடத்திவரும் விஷயங்களில், நியமவிதியை மீமாம்ஸகர் கள் நிரூபித்திருக்கிறார்கள், இதையும் பார்க்கும்போது, சிஷ்யபுத்தி யின் பரிபாகத்திற் கேற்றபடியே உபதேசங்க ளிருக்க வேண்டு மெல் ப ு விசதமாகிறது.

பசுக்கள் மாத்திரமேயல்ல, மற்ற ஜந்துவர்க்கங்களைக்கூட ஜீவயமாகவே நினைத்துத்தான் மனு முதலியவர்கள் §கிருஹஸ்தர் களுக்குஅமி, உரல், அரிவாள்மனை, அடுப்பு, இயந்திரம், ஆகியஐந்து வகை ஸ்தானங்கள் இருக்கின்றனவென்று சொல்லியிருக்கிறார்கள். இதே காரணத்தால் தேவதார்த்தமாகப் பாகஞ் செய்யவேண்டு மென்றும் தனக்கென்று செய்யக்கூடாதென்றும் விதிக்கப்பட்டி ருக்கின்றன. இவ்வளவு மிருந்தும் எந்த உபதேசமும் உப தேசிக்கிற புருஷனுடைய சமீப தேசத்திலும் சமீபகாலத்திலும் மாத்திரம் சற்றேறக்குறையச் சரியாக அனுசரிக்கப்பட்டு வரக்கூ டுமே யல்லாது, உபதேசிக்கிறவனை யறியாத விடங்களிலும் கால ங்களிலும் வியாபித்து வரும் சப்தங்கள் நிஜமாக உபதேசிக் கிறவன் கருத்தைக் கேட்பவர்கள் மனதில் புகச்செய்யச் சக்தியுள்ளன வாக விருப்பது கடினம். ஆதலால், உலகத் தில் பெரும்பாலும் ராகத்வேஷங் களுக் குட்பட்டு, எல்லா விதிகளையும் அதற்கிணங்க நடத்திக்கொண்டு போவது இயல்பா யிருப்பதினால், சில காலங்களில் தங்களுக்கு வேண்டும்போதே

§ பஞ்சஸூனக்ருஹஸ்தானு.

ல்லாம், தேவதா பலியை நிமித்தமாக வெடுத்துக்கொண்டு பசு ஹிம்சைகளைக் கையாடுவது ஸாதாரண ஜனங்களிடத்தில் மிகுகுதியாக வேற்பட்டிருந்தது. அந்தக் காலத்திற்கு ஹிம்சைகூடாதென்று சொன்ன உபதேசமானது அவசியமானதும் சரியானதுமாயிருந்தது. ஹிம்ஸைகூடாதென்று மாத்திரம் சொன்னால், கேட்பவர்கள் மனதில், அது பதியமாட்டாதாகையினால் உலகவிஷயங்களை வெறுக்குப்பதும், மேலான பதம் பெறவேண்டுமென்கிற ஆசையுண்டாவதும் இந்த ராகத்வேஷங்களை நிவர்த்திக்கிறதற்கு மூலகாரணமென்று நினைத்து நான்கு வாக்கியங்களை ஆதாரமாகப்புத்தர் சொன்னார். அவையாவன:—(1) எல்லாம் க்ஷணிகம், (2) எல்லாம் துக்கம், (3) எல்லாம் ஸ்வலக்ஷணம், அதாவது, ஒரு வஸ்துவும் மற்றைய எந்தவஸ்துவோடும் முழுதும் ஒற்றுமையடையாதென்பது, (4) எல்லாம் சூன்யம், என்பவை.

உண்மையாக இந்த உபதேசத்தை ஆராய்ந்து பார்க்குங்கால், நமது வேதாந்தசாஸ்திரத்திற்கு இது ஒத்தாகவே இருக்கலாம். அஃதெவ்வாறெனில், க்ஷணிகமென்றால் ஒருநொடியிலழியத்தக்கதென்று பொருளாகின்றது. வஸ்துக்களெல்லாம் அநித்யமென்று ச்ருதிஸ்மிருதிமுதலியவைகளால் சொல்லப்பட்டேயிருக்கிறது. க்ஷணத்திலழியாவிட்டாலும் அதிகமாய்ப்பிரியம் வைத்தவஸ்து நசிக்குங்கால், அதிருந்த காலம் ஒரு நிமிஷம்போல் தோற்றுவது சஹஜம்.

தி. ஈ. ஸ்ரீநிவாஸாசாரியர்.

நூற்றெட்டுத் திருப்பதிகள்.

———(*)———

ஒவ்வொரு விஷ்ணு சமயத்தவரும் நூற்றெட்டுத் திருப்பதிகளின் ப்ரபாவங்களை யறியவேண்டியது அவசியமென நம்பி இச்சிறு வியாசத்தை அச்சியற்றத் துணிந்தேன். தமிழ் நாட்டிலுள்ள விஷ்ணு ஸ்தலங்களின் மகாத்மியத்தைத் தெரிந்துகொள்வதற்கு ஸ்தலபுராணங்களையும், பதினெண் புராணங்களையும், ஆகமங்களையும் தவிர, வேறு கிரந்தங்களிருப்பதாகக் காணவில்லை. இவைகளிலிருந்து விஷ்ணுஸ்தலங்கள் ஒவ்வொன்றும் கட்டிய காலத்தை அறியமுடியாது. பக்தர்களும பண்டிதர்களும் புராணங்களையும், குருபரம்பராப்ரபாவத்தையும் முற்றும் வாஸ்தவமென நம்பிவருகின்றனர். ஆனால் சென்ற இருபதுவருஷங்களாக மேற்கூறிய ஸ்தலங்களிலுள்ள சிலாதாம்ரசாஸனங்களைச் சிலர் நன்றாகப்பரிசோதித்து ப்ரசுரம் செய்தும், இந்தியாவிலும், ஐரோப்பாவிலும் ஸம்ஸ்கிருத பண்டிதர்கள் புராணங்களின் காலங்களைத் தெளிவாய் நிர்ணயித்தும் வருவதில், புராணங்களிலும் குருபரம்பரையிலும் சொல்லியிருப்பன அனேகமாய் மதியுள்ளான் கட்டெடன வெளியாகின்றன. மேலும் சில ஆழ்வார்களின் காலங்களை யறிந்துகொள்ளும் வண்ணம் அவ்வாழ்வார்களே நாலாயிரப் ப்ரபந்தத்துடன் சிற்சில விடயங்களில் அவர்கள் காலத்திய அரசர்களின் பெயரையும், அவர்கள் புரிந்த யுத்தங்களையும் சொல்லியிருக்கின்றனர். இவற்றைப் பக்தர்களும் பண்டிதர்களும் தங்கள் மதக்ரந்தங்களுக்கு விரோதமாகுமென வஞ்சிக்கவனியதவாகளாயிருப்பினும், 'உண்மை கடைப்பிடி' என்றிருப்பதால், உண்மை வெளியாகும்பொருட்டு தாம்ரசாஸனங்களையும் தமிழ்வேதமென ஸ்ரீவைஷ்ணவர்கள் மதிக்கும் நாலாயிர ப்ரபந்தத்தையும் ஆதாரமாகக்கொண்டு சில ஸ்தலங்களின் காலங்களையும், சில ஆழ்வார்களின் காலங்களையும் இவ்வியாசத்தில் பரக்க விளக்கிக்காட்டத் துணிந்தேன். பாரபக்ஷமன்னியில் முழுதும் வாசிப்பவர்களுக்கன்றி மற்றவர்களுக்கு இதன் உண்மை

புலப்படாது. பூர்வாசாரியர் மீதுள்ள பேரபிமானத்தால் இதிற் சொல்லிய காலங்களைத் தவறென்று (குசவன் பல நாள் வேலையைத் தடியடியுடன் ஒரு கணத்தில் அடித்து விடுவதுபோல்) உடனே திரஸ்கரித்து விடலாம். ஆனால் அப்படிச் செய்வது தர்மமன்று. இதுகாறும் வெளியான விஷயங்களை இவ்விடம் சொல்வதில் எப்பிழை செய்திருப்பினும் இவ்வியாசத்தை வாசிக்குமவர்கள் பொறுத்துக்கொள்ள வேண்டியதாய்ப் பிரார்த்திக்கின்றேன்.

ஸ்ரீய: பதியாய், ஜகத்காரணபூதராய், ஸர்வஜ்ஞராய் ஸ்ரீவைகுந்தத்தில் வீற்றிருக்கும் ஸ்ரீமந்நாராயணன், லீலாவிபூதி முழுதும் பொய்நூலை மெய்நூலென்றோதும் சாக்கியர் சமணர்களான பாஷாண்டிகள் நிறைந்து, அகிலாத்மாக்களும் அப்படுகுழியில் வீழ்ந்து மூல்வதைச் சகிக்கப்பொறாதவராய், அவர்கள் உஜ்ஜீவிக்கும்பொருட்டு அநேகஸ்தலங்களில் அப்போதைக்கப்போது ஒவ்வொரு காரணம்பற்றி அர்ச்சாரூபமாய் எழுந்தருளினார். பரமகாருணியரான இவர் எழுந்தருளியிருக்கும் ஸ்தலங்கள் பலவாயிருப்பினும் மயர்வறமதி நலமருளப்பெற்ற ஆழ்வார்களும் பின்னர் ஸ்ரீ நாதமுனிகள் தொடக்கமாயுள்ள ஆசார்யர்களும் மங்களாசாஸனம் பண்ணியவை நூற்றெட்டானதால் அவற்றின் ப்ரபாவங்களைமாத்திரம் இவ்விடம் சுருக்கமாய் எழுதுவதாயிற்று.

திராவிடதேசத்துள்ள விஷ்ணு ஸ்தலங்கள் * மூன்றுவகையாயிருக்கும். முதலாவது விஷ்ணுபக்தர்களான ஆழ்வார்களாலும் ஆண்டாளாலும் மங்களாசாஸனம் பண்ணப்பட்டு திரவிடவேதமாகிற நாலாயிர ப்ரபந்தத்துள் சொல்லப்பட்டுள்ளன. இவைகளைத்தான் திவ்ய தேசமென்று வழக்கமாய்ச் சொல்லுகிறது.

* பாஞ்சராத்திரம் என்றக்ரந்தத்துள் விஷ்ணுஸ்தலங்கள் தெய்வ்யம் ஆர்ஷம், மானுஷம், என மூன்றுவகையாய்ப் பிரிக்கப்படுகின்றன. இவைகளில் திவ்யம் - தேவதைகளால் ஆராதிக்கப்பட்டதென்றும், ஆர்ஷம் - ரிஷிகளால் ஆராதிக்கப்பட்டதென்றும், மானுஷம் மனிதர்களால் ஆராதிக்கப்பட்டதென்றும், சொல்லப்படும். இதை இவ்விடம் அனுஷ்டிக்கவில்லை.

இத்தன்மையதாகிய ஸ்தலங்கள் சுமார் † ஆயிரம் வருஷங்களுக்கு முன்னுண்டானவைகளாயிருக்கும். இரண்டாவது புராணஸ்தலங்கள்; இவை ஆழ்வார்கள் காலத்திற்குப்பின் ஸ்ரீமந் நாதமுனிகள் தொடக்கமாயுள்ள பூர்வாசாரியர்களாலும் அவர்கள் காலத்திய அரசர்களாலும் எடுப்பிக்கப்படும் மங்களாசாஸனம் பண்ணப்பெற்றும் அதற்கிசைய ஸ்தலபுராணங்கள் ஏற்படுத்தப்பட்டுமுள்ள ஸ்தலங்கள்; ஆதலின் அனேகமாய்ப் புராணஸ்தலங்கள்சுமார் சகா 1000 ஞூ முதல் 1500-க்குள் உண்டானவையாயிருக்கும். மூன்றாவது அபிமானஸ்தலங்கள்; இவைகள் சமீபகாலங்களில் சிற்றரசர்களாலும் ஸ்ரீமான்களாலும் எடுக்கப்பட்டு அருகிலுள்ள திவ்யதேசத்தெம்பெருமான்களின் அபிமானம் பெற்றவைகளாயிருக்கும். இப்படிப்பட்ட ஸ்தலங்கள் அசங்கேதம்,

ஆனால், பௌத்த, சைவ, வைஷ்ணவ மதங்கள் ஒன்றோடொன்று போர்புரிந்துகொண்டிருந்த காலத்தில் * (சகஞூ 500-1000) அஷ்டாதச புராணங்களுண்டான தென்றும், ஸ்தலபுராணங்கள் இன்னும் சமீபகாலங்களில் வித்வான்களால் அவர்கள் நாட்டையும், ஊரையும், அடிபணியும் கடவுளையும் சிறப்பித்துப் பாடப்பட்டனவென்றும், ஆனதால் அவைகளைக் கிஞ்சித்தேனும் நம்ப இடமில்லையென்றும புகழ்பெற்றோங்கிய ஜர்மானிய பண்டிதர்களான தேவசேனன், பூவலர் முதலானோர் அபிப்பிராயப்படுகிறார்கள். ஆழ்வார்களிருந்தகாலம் அஷ்டாதசபுராணங்களிற் சில வுண்டான காலத்திற்கு முந்தியதானதாலும், அவர்கள் திருவாய் மலர்ந்தருளிய பாடல்கள் புராணங்களைப்போல அபத்தக் கலப்பல்லாது சுத்த பக்தியால் பாடப்பட்டமையாலும், புராணங்கள் வேதத்திற்குத் தாழ்ந்தவைகளா யிருப்பதாலும், இவ்வியாசத்தில் திரவிட வேதமாகிய நாலாயிரப்பிரபந்தத்தையும் புராணங்களுண்டாகு முன்னுள்ள செந்தமிழ் இலக்கியங்களான பத்துப்பாட்டு சிலப்பதிகாரம் முதலா

† ஆழ்வார்கள் காலம் சகஞூ 550 முதல 900-த்துக்குள் என்று பின்னர்க் கூறப்படுமாகையால், அவர்களால் மங்களாசாஸனம் பண்ணப்பட்ட ஸ்தலங்கள் ஆயிரம் வருஷங்களுக்கு முன்னுண்டானவைகளென்று சொல்வதாயிற்று.

* இந் - அன், பு 25, ப 328.

னவைகளையும் சில தாம்ரசாஸனங்களையும் ஆதாரமாய் எடுத்துக் கொண்டிருக்கின்றது.

இவ்விதம் திவ்யதேசங்கள் நூற்றெட்டுக்கும் ஸ்தலபுராணங்கள் ஏற்பட்டிருந்தபோதிலும், தற்காலத்தில் அவற்றின வைபவத்திற்குத் தக்கபடி சிலவற்றை மட்டும் ஏற்றமாயும், சிலவற்றை சாமான்யமாயும் கொள்வதுண்டு. இவைகளுக்கு வைபவம் பொருள் இடம், காலம் என் மூன்றுவகையாலுண்டாகும்.

இதில் முதலாவது பொருள். 'பொருளல்லார்க்கு இவ்வுலகில்லை' என்றபடி, சில திவ்யதேசங்களுக்குப் பூர்வீக அரசர்கள் கிராமங்களையும், ஆபரணங்களையும் விசேஷமாய்க் கொடுத்திருக்கிறபடியால், இவைகளைச் சுற்றி காலக்ஷேப நிமித்தம் அநேக ஸ்ரீ வைஷ்ணவர்கள் வசிப்பதுண்டு. ஒரு திவ்யதேசத்திற்கு ஏற்றம் உண்டாவது பிராமணர்களாலானதால் காஞ்சீபுரம், ஸ்ரீ வில்லிபுத்தூர், திருக்குருகூர், முதலான சில ஸ்தலங்களுக்கு ஏற்றமுண்டாயிற்று. அன்றியும் அபிமானஸ்தலங்கள் புராணஸ்தலங்களாவதற்கும், புராணஸ்தலங்கள் திவ்யதேசங்களாவதற்கும் திரவியமே முக்கியகாரணமாயிருக்கும். திருஷ்டாந்தமாக ராஜமன்னார்குடியை எடுத்துக்கொள்ளலாம். இவ்வூர் சக ௵ 970-க்கு இப்பால் கட்டப்பட்டதென்றும், இதன்பெயர் ராஜாதிராஜ சதுர்வேதி மங்கலமென்றும், கோபாலன சந்நிதி சக௵ 1000-க்குப் பின்னர் குலோத்துங்க சோழனால் உண்டுபண்ணப் பட்டதென்றும், இதன்பேர் குலோத்துங்கசோழ * விண்ணகரென்றும், பின்னர் இக்கோயில் இற்றைக்கு 230-வருஷங்களுக்குமுன் தஞ்சாவூர் அரசனாகிய விஜயராகவ நாயகரால் விஸ்தாரமாய்க் கட்டப்பட்டதென்றும், இவ்வூரிலுள்ள குளங்களையும் வெட்டினவன் இவனேதானென்றும் நன்றாய்த்தெரியவருகிறது. இவ்வாறிருக்க, சந்நிதியும் நவதீர்த்தங்களும் ஆழ்வார்கள் காலந்தொடங்கி யுள்ளனவென்றும், இவ்வூரெம்பெருமான் ராஜனாகையால் ஆழ்வார்கள் மங்களாசாஸனம் பண்ணவில்லையென்றும், சிலர் சொல்வதுண்டு. இத்துடன் நில்

* விண்ணகர் - விஷ்ணுக்ரகம். கோபால் என்ற கண்ணபிரான் குலோத்துங்கசோழ மகாராஜனால் தொழப்பட்டமையின் 'ராஜகோபாலன்' என்ற பேருண்டாயினதென்று அறியவும்.

ளாது பெருமாள்கோயில் (வரதராஜன்), திருநாராயணபுரம், ராஜமன்னார் கோயில் என்ற மூன்றும் திவ்யதேசங்களாகிவிட்டன. ஆனால் திருப்பதிகள் நூற்றெட்டென்ற சங்கைமுன்னமே ஏற்பட்டுவிட்டபடியால், இம்மூன்று புராணஸ்தலங்களையும் இத்தொகைக்குள் சேர்க்கமுடியாது. 'அமரர்களதிபதி,' 'திருநாரணன்,' 'துவரைமன்னன்' என்ற பதங்கள் நம்மாதவருடைய திருவாய்மொழியில் எந்தெந்த பாசுரங்களில் வருகின்றனவோ அவைகள் காஞ்சி வரதராஜனையும், திருநாராயணபுரம் செல்வப்பிள்ளையையும், மன்னார்குடி ராஜகோபாலனையும் உள்ளத்திருத்தி அவர்கள் விஷயமாய் ஆழ்வார் பாடியதாய்ச் சிலர் சொல்லுகின்றனர். இவ்வாழ்வார் காலத்தில் இம்மூன்று ஸ்தலங்களும் உண்டாகவில்லையென்று பின்னர் வெளியாகும்.

இரண்டாவது, இடம். நீர்வளம் மலைவளம் என இருவகைத்து. விசேஷமாய் பிராம்மணர்கள் நித்தியவாசம் பண்ணுமிடம் நீர்வளம் பொருந்திய நாடாதலால் உபயகாவேரி மத்தியிலுள்ள ஸ்ரீரங்கம், திருக்குடந்தை, தாம்பிரபரணி நதி தீரத்திலுள்ள திருக்குருகூர், ஸ்ரீவைகுண்டம் முதலான சில திவ்ய தேசங்களுக்கு அதிக வைபவம் உண்டாயிற்று. தெள்ளருவியும் ஆழ்சுனையும் நீள்காவும் நிறைந்து மலைவளம் பொருந்தி யாவராலும் எளிதில் அணுகக்கூடாததும் அதனாலே நைர்மல்யமாயும் அதி ரமணீயமாயுள்ளது மலையாதலால், திருமலை, திருமாலிருஞ் சோலை முதலாயுள்ள சில திவ்ய தேசங்களுக்கு அளவிடக்கூடாத வைபவமுண்டாயிற்று.

மூன்றாவது, காலம். இது ஆழ்வார்களுடைய மங்களாசாஸனப் பாசுரங்களால் வெளியாகும். ஆழ்வார்கள் பன்னிருவரும் ஒரேகாலத்திலல்லாது சக ௵ 520 – முதல். 870 - வரையிருந்ததாக சில தாம்ர சாஸனங்களாலும், நாலாயிர ப்ரபந்தத்தாலும் வெளியானபடியால், இவர்களால் முந்தினவர்பாடிய ஸ்தலங்கள் புராதனமென்றும், பிந்தினவர்பாடிய ஸ்தலம் நவீனமென்றும் சொல்லப்படும். அன்றியும் ஒரு திவ்யதேசத்தின் ப்ராபல்யத்தைத் தெரிவிப்பதற்கு அதை மங்களா சாஸனம் பண்ணின ஆழ்வார்களின் தொகையே போதுமான சாக்ஷியாயிருக்கும். இதனால் ஸ்ரீரங்கம், திருமலை, திருமாலிருஞ்சோலைமலை, திருவெஃகா முதலான திவ்ய

தேசங்கள் மங்கபுராதன ஸ்தலங்களென்றும், இவைகள்தாம் ஆழ்வார்கள் காலத்திலேயே எங்கும் பிரசித்தமானவையென்றும் கொள்ளப் படுகின்றன.

ஆழ்வார்கள் காலத்தில் தமிழ்நாடுகள் பல்லவம் (தொண்டை மண்டலம்), சோழம், பாண்டியம், சேரம், என நான்காயிருந்தன. இதில், பல்லவம் தத்காலத்திய சித்தூர், செங்கல்பட்டு, மஞ்சகுப்பம் ஜில்லாக்களும், சோழம், தஞ்சாவூர், திருசிராப்பள்ளி ஜில்லாக்களும், பாண்டியம், மதுரை, திருநெல்வேலி ஜில்லாக்களும், சேரம், திருவனந்தபுரம் சமஸ்தானமும், கொஞ்சி சமஸ்தானமும், மலையாளம் ஜில்லாவும் ஆகவிருந்தன. திவ்ய தேசங்கள் நூற்றெட்டில் 96 இந்த திராவிடதேசத்திலுள் ளிருக்கின்றன. இதில் பதிகம் (பத்துப்பாட்டு) பெற்றஸ்தலங்கள் 70-தாம். வைபவக்ரமத்தில் இவைக ளின்னின்னவென்று பின்வருமாறு எழுதப்பட்டிருக்கின்றன. ஸ்ரீரெங்கம் (பதிகம் 14–மங்களா சாஸனம் பண்ணின ஆழ்வார்கள்-12); திருவேங்கடம் (ப. 9, ஆ. 10); திருக்குடந்தை (ப. 1, ஆ. 7); திருமாலிஞ்சோலை (ப-9, ஆ-6); திருக்கோட்டியூர் (ப-2, ஆ-6); திருக்கண்ணபுரம (ப-3, ஆ-4); திருப்பேர்நகர் (ப-2, ஆ-4); திருக்கோவிலூர் (ப-1, ஆ-3); திருவல்லிக்கேணி (ப-1, ஆ-3); பரமேச்சுரவிண்ணகரம் (ப-1, ஆ-3); திருச்சித்திரகூடம் (ப-3, ஆ-2,); திருக்கடனமல்லை (ப-2, ஆ-2); திருவெவ்வுளூர் (ப-1, ஆ-2,); திருநீர்மலை (ப-1, ஆ-2); அட்டபுயகரம் (ப-1, ஆ-2); திருவாலி (ப-3, ஆ-2); திருமோகூர் (ப-1, ஆ-2); திருமூழிக்களம் (ப-1, ஆ-2): திருப்புலியூர் (ப-1; ஆ-2); திருநாவாய் (ப-1, ஆ-2); திருவல்லவாழ் (ப-1, ஆ-2); சாலக்ராமம் (ப-1, ஆ-2); வதரியாச்ஸிரமம் (ப-2, ஆ-2); திருநின்றயூர் (ப-10, ஆ-1); திருவழுந்தூர் (ப-4, ஆ-1); திருப்பல்லாணி (ப-2, ஆ-1); பதிகம்பெற்ற திவ்ய தேசம் 70 - ல், முன் சொன்ன முப்பது போக நின்ற 40-ல் 25–திருமங்கை யாழ்வாராலும், பெரியாழ்வாராலும், 14 - நம்மாழ்வாராலும் ஒவ்வொரு பதிகம் மாத்திரம் பாடப்பெற்றுள்ளன.

விஷ்ணு ஸ்தலங்கள் நூற்றெட்டில் ஒவ்வொரு ஆழ்வாரும் மக்களா சாஸனம் பண்ணினது இத்தனையென்று பின்வரும் அட்டவணை காட்டும்.

ஆழ்வார்.	ப 25	சோ 40	பா 18	சே 13	பொ 96	வ 10	ஆ மொ	ஷரா.
திருமங்கையாழ்வார்	24	39	13	4	75	10	85	இதில் திருப்பாற்
நம்மாழ்வார்	2	4	2	12	30	3	4	கடலும் பரமபதமும்
பூதத்தாழ்வார்	7	3	2	0	12	0	12	சேரவில்லை
பேயாழ்வார்	7	2	3	0	11	0	11	ப. பல்லவம்
திருமழிசையாழ்	5	2	4	0	10	0	10	சோ. சோழம். பா.
பெரியாழ்வார்	1	5	0	0	10	7	17	பாண்டியம்; சே. சே
குலசேகராழ்வார்	1	3	0	1	5	4	7	ரம்; வ. வடநாடு;
பொய்யாழ்வார்	4	1	2	0	5	0	5	மொ-மொத்தம்.
ஆண்டாள்	1	1	0	0	4	3	7	
திருப்பாணாழ்வார்	1	1	0	0	2	0	2	
தொண்டரடிப்	1	0	0	0	1	0	1	
மதுரகவி	0	0	0	0	0	0	0	

இதில் திருமங்கையாழ்வார் பாடியவை 85 - என்றும், எந்த ஆழ்வாரேனும் இதில் பாதி திவ்யதேசங்களையேனும் மங்களா சாஸனம் பண்ணவில்லை யென்றும் நன்றாய் வெளியாகின்றன. திருமங்கை மன்னன் சோழதேசத்துள்ள திருவாலி நாட்டுச் சிற்றரசராயும், விஷ்ணு பக்தியிற் சிறந்தவராயும் இருந்தமைபற்றி அக்காலத்துள்ள திவ்யதேசங்கள் ஒவ்வொன்றையும் விடாது தேடித்திரிந்து எம்பெருமான் கமலத்திருவடி தொழுது மங்களா சாஸனம் பண்ணியருளினர். பல்லவதேசத்துள்ள ஸ்தலங்கள் 25-ல், ஆதியூரானை அழகிய இலைகள் நீங்கலாகவுள்ள 24 - யும் சோழதேசத்தி லுள்ள ஸ்தலங்கள் 40 - ல், அன்பின் நீங்கலாகவுள்ள 39 - யும், பாண்டிய தேசத்து திவ்யதேசங்கள் 18 - ல், பெரியாழ்வா ராலும் ஆண்டாளாலும் மங்களா சாஸனம் பண்ணியருளின திருக்குருகூர் உள்ளிட்ட 10 - ம், நீங்கலாகவுள்ள 8 - ம், சேரநாட்டு ஸ்தலங்கள் 13-ல், நம்மாழ்வாரால் மாத்திரம் பாடப்பெற்ற திவ்யதேசங்கள் 9 - நீங்கலாகவுள்ள 4 - ம், திருமங்கை யாழ்வாரால் மங்களா சாஸனம் பண்ணப்பட்டுள்ளன.

ஓர் ஆழ்வார்பாடிய பெருமாளை மற்றொருவர் பாடக்கூடாது என்ற நிபந்தனை யில்லாதபடியாலும், பூதத்தாழ்வார் அவதார ஸ்தலமாகிய திருக்கடன் மல்லையையும், திருப்பாணாழ்வார் அவதார ஸ்தலமான உறையூரையும் திருமங்கையாழ்வார் பாடியிருப்பதாலும், திருத்தங்காலப்பனைப்பாடிய திருமங்கையாழ்வார் அதன் காத்தூரத்தில் தற்காலத்தில் மிக ப்ரஸித்தமாயுள்ள நாச்சியார் திருமாளிகையென்ற ஸ்ரீ வில்லிபுத்தூரையும், திருக்குறுங்குடிவரையிற் சென்று நம்பியை மங்களாசாஸனம் பண்ணின திருமங்கையாழ்வார் சடகோபன் அவதார ஸ்தலமான திருக்குருகூர் முதலான தென்பாண்டிநாட்டு திவ்யதேசங்களையும், சேரநாட்டுள்ள சில திவ்யதேசங்களையும் மங்களாசாஸனம் பண்ணாது போனதால் இவ்வாழ்வார்காலத்தில் இந்த திவ்யதேசங்களில்லை யென்றும், பெரியாழ்வாரும், ஆண்டாளும் நம்மாழ்வாரும் திருமங்கை மன்னனுக்குப் பிந்தினவர்களென்றும் கொள்ளக்கிடக்கின்றன. மற்றக்காரணங்களைத் திருக்கூடல், ஸ்ரீ வரமங்கை, வரகுணமங்கை, பரமேச்சுர விண்ணகரம் முதலான திவ்யதேசங்களினடியில் பரக்கக்கண்டு

கொள்க. திருமங்கைமன்னன் காலம் பரமேச்சுரவிண்ணகரப்பாசுரங்களிற் சொல்லியிருக்கும் பல்லவன் மல்லயர்கோனாகிய நந்திவர்மாவின் காலமானதால் (சகஸூ 635-660) நம்மாழ்வார், பெரியாழ்வார், ஆண்டாள் என்ற இவர்களால் மாத்திரம் மங்களாசாஸனமான திவ்யதேசங்கள் சகஸூ 700 - க்கிப்பால் உண்டாயிருக்க வேண்டுமென்பதற் கையமில்லை. ஆனால் ஆழ்வார்களின காலத்தைப்பற்றிக் குருபரம்பரா ப்ராபாவத்தில் சொல்லியிருப்பன இப்பொழுது சில விதிதங்களாலும் தாம்ரசாஸனங்களாலும் வெளியாகின்றவைகளுக்கு ஒத்திருக்கவில்லையென்றும், துவாபரயுகத்திலும் கலியுக ஆரம்பத்திலும் ஆழ்வார்களிருந்ததாகச் சொல்வது அவர்களுக் கதிகவைபவ முண்டாகவேண்டுமென்று பூர்வா சாரியர்கள் செய்த கற்பனையென்றும், சிலர் அபிப்பிராயப் பட்டிருந்தபோதினும், அவை முற்றும் தவறென்று இவ்விடத்தில் சொல்லப்புகுந்ததில்லை.

அஷ்ட ஸ்வயம்பு ஸ்தலங்கள் சாளக்ராமம், நைமிசாரண்யம், வதரியாச்சிரமம், புஷ்கரம், திருமலை, ஸ்ரீமுஷ்ணம், ஸ்ரீரங்கம், வானமாமலை என்றும்; கோயில் (ஸ்ரீரங்கம்) திருமலை (திருப்பதி) பெருமாள்கோவில் *(காஞ்சிபுரம்) என்ற மூன்று, விஷ்ணுஸ்தலங்களில் முக்யமானவை யென்றும் சிலருடைய சித்தாந்தம். முன்சொன்ன ஸ்வயம்பு ஸ்தலங்களெட்டில், புஷ்கரம் ஸ்ரீ முஷ்ணம், வானமாமலை என்ற மூன்றையும் திருமங்கையாழ்வாரும், இதில் வாமனமாமலை நீங்கலாக மற்றவிரண்டையும் வேறெந்த ஆழ்வாரும் மங்களாசாஸனம் பண்ணாதபடியாலும், நாலாயிரப்ரபந்தத்தில் இவ்வாறையும் ஸ்வயம்பு ஸ்தலங்களென்று சொல்லாத படியாலும் இவ்விடத்தில் ஸ்வயம்பு ஸ்தலங்கள் எதுவுமில்லையென்று கொள்ளப்படுகிறது.

இனி விஷ்ணு ஸ்தலங்களில் கோயில், திருமலை, பெருமாள் கோயில் என்பதை ஆராய்ந்துபார்க்கில் திவ்யப்ரபந்தங்களாலும், சிலப்பதிகாரமாதியாயுள்ள சங்கத்துத் தமிழ் நூல்களாலும் கோ

* இதற்காதாரமாக நம்மாழ்வார் அவர் முதற் பிரபந்தமும், ருக்வேதசாரமென்று வழங்கும் திருவிருத்தத்தில் இம்மூன்று திவ்யதேசங்களைத்தான் பாடியிருக்கின்றார் எனச சொல்லுவர்.

யில் திருமலை என்ற இரண்டும் முக்யமானவைகளென்று நன்றாய் விளங்குகின்றன. காஞ்சிமாநகரில் திருவெஃகாமட்டில் மூன்னர்க் கூறிய இரண்டைப்போல் மிக்க அருதி ஸ்தலமாயிருப்பினும், ஒரு ஆழ்வாரேனும்பாடி, ஒரு பதிகமாயினும் பரமேச்சுர விண்ணகரம் அட்டபுயகரம், நீங்கலாக மற்றெந்த ஸ்தலங்களின்மேல் பாடப்படாததுபற்றி இச்சிறு க்ரந்தத்தில்பெருமாள்கோயிலை,கோயில் திரு திருமாலிருஞ் சோலையைப்போல் (நாலாயிரப் ப்ரபந்தத்துட் சொல்லியபிரகாரம்) அவ்வளவு சிரேஷ்டமானதாக எடுத்துக்கொள்ளவில்லை. இதற்குக் காரணங்கள் அந்த திவ்யதேசத்தின் கீழ் விரிவாகச் சொல்லப்படும். ஸ்ரீரங்கம் நீங்கலாக மற்ற ஸ்தலங்கள் யாவற்றினும் முக்யமானவை 'தென்னனுயர் பொருப்பும் தெய்வவடமலையும்' என்று திருமங்கையாழ்வாரும், 'வெறபொன்றிருஞ்சோலை வேங்கடமென் றிவ்விரண்டு நிற்பென்று நீ மதிக்கும் நீர்மைபோல்' என்ற பூதத்தாழ்வாரும், ' திருமாலிருஞ்சோலை மலையே திருப்பாற்கடலே யென்றலையே, திருமால் வைகுந்தமேதான் வேங்கடமேயெனதுடலே' என்று நம்மாழ்வாரும், 'இருப்பிடம் வைகுந்தம் வேங்கடம் மாலிருஞ்சோலை யென்றும், பொருப்பிடம் மாயனுக்கு நல்லோர்' என்று திருவரங்கத்த முதனாரும் அருளிச் செய்தார்கள். மேலும் இம்மூன்று எம்பெருமான்களைத்தான் சைன சமையத்தவராகிய இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தில் சொல்லியதும், மாலை - அந்தாதி கலம் பகரூபமாகப் பிந்திய கவிகள் பாடியதும், ஆனதால், தமிழ் நாடுகள் நான்கினுள்ளுமுள்ள விஷ்ணு ஸ்தலங்களில் சிரேஷ்டமானவை ஸ்ரீரங்கம், திருவேங்கடம், திருமாலிருஞ்சோலை யென்பதாயிற்று.

முன்னர் சொன்னபடி பதினெண் புராணங்களையும் ஸ்தலபுராணங்களையும் முற்றும் வாஸ்தவமென நம்பாது 'வண்டினல்கள் பண்பாடும் வேங்கடத்துக் கோனேரிவாழும் குருகாய்ப் பிறவேனே' என்றும், 'கடல் நிறக்கக் கடவுளெந்தை யரவணைதுயிலுமாகண்டு, உடலெனக்குருகுமால்' என்றும், 'ஆடியாடி யகங்கரைந்து இசை பாடிப்பாடிக் கண்ணீர் மல்கி எங்கும் நாடி நாடி' என்றும் பலவாறுகப் பக்திமேலிட்டு அவாவற்று வீடுபெற்ற ஆழ்வார்கள் திருவாய்மலர்ந்தருளின நாலாயிர ப்ரபந்தத்தையே ஆதாரமாய்க்கொ

ண்டு இந்த அவதாரிகையையும் சில முக்கிய ஸ்தலங்களின் சரித்திரத்தையும்* எழுதியிருக்கிறபடியால் இவை சில ஸ்ரீ வைஷ்ணவர்களுக்குத் திருப்தியைத் தராதாயினும் அங்கீகரித்துக் கொள்ள வேணுமாய் பிரார்த்திக்கப்படுகிறது.

ம. ஸ்ரீநிவாஸ ஐயங்கார்.

---

* ஸ்ரீவைஷ்ணவ ஸ்தலங்களின் சரித்திரம் தனப்புத்தகமாய் வெளிவரும். மேலேயிருக்கும் வியாசம் அப்புத்தகத்தின் முகவுரை. ப—ர்.

தாதாபாய் நௌரோஜீ.

———(✻)———

சர்வசக்தியுடன், பரமகாருண்ய முடையவராய், ஓயாது தன் தேசத்தைப்பற்றி நினைத்து நினைத்து வருந்தி, தன் நாடு எப்படியாவது முன்னுக்கு வரவேண்டுமென்ற எண்ணத்துடன், எழுபத்தேழு வயதாகியும், சளைப்பற்று உழைத்துவரும் மஹான், பம்பாய் நகரத்தில், 1825-ம் வருடம், செப்டம்பர்மீ 4-ந்தேதியன்று ஓர் பார்ஸி குருவின் புதல்வராகப் பிறந்தார். பார்ஸி ஜாதியார், பம்பாயிலும், அதற்கடுத்த கராச்சி, ஆமதாபாத் முதலிய விடங்களிலும் வசித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் மொத்தம், 1,50,000 பெயர்களாயிருந்தாலும், அவர்களா லுலகத்திற் குண்டாகும் நன்மைக்களவேயில்லை. அவாகள் பெர்சியா தேசத்தில் ஸோராஸ்டர் மதமே துருக்கர்களா லழியுஞ் சமயத்தில் நமது தேசத்துக்கு தமது மதத்தைக் காப்பாற்றவேண்டி யோடிவந்தார்கள். அவர்களுக்குள் ஜனக்கட்டும், காருண்யமும், செல்வமும், வெகு நாட்களாக விருந்துகொண்டிருக்கிறது. அவர்கள் மதம் சற்றேறக்குறைய பிராமண மதம் போலவே தானிருக்கும்.

தாதாபாய் நௌரோஜியின் நான்காவது வயதில் அவர் தந்தையிறந்துபோய்விட்டார். இவரை இவர்தாய் பம்பாய் அரசாங்கத்துப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பினார்கள். முதல் முதல் முடிவுவரையிலும். இவர் நல்ல சாமர்த்தியசாலி யென்பதைக் காண்பித்தார். இவர் புத்தி சாதுர்யத்தைக்கண்டு வியந்து அரசாங்கத்தார் இவர் படித்த கலாசாலையிலேயே, கணக்குப் பண்டிதராக நியமித்தார்கள். அந்த வேலை அது வரையில் வெள்ளைக்காரர்களுக்கென்றே ஏற்பட்டிருந்தது. அப்புறமும் அநேகமாய் அந்த வேலையை வெள்ளைக்காரர்களே வகித்து வந்திருக்கிறார்கள். இவர் ஆதிமுதல் தம் நாட்டிலுள்ள அநேக விஷயங்களைச் சீர்திருத்தவேண்டுமென்ற வெண்ணங்கொண்டிருந்தார். அதற்காகவும் அநேகம் ஏற்பாடுகள் செய்து கொண்டிருந்தார்.

இப்படி யிருக்கையில், தமது வேலை ராஜீநாமாவாகக் கொடுத்துவிட்டு 1855-ம் வருஷத்தில், காமாகம்பெனியில் ஒரு பாகஸ்தராக லண்டன்போய்ச் சேர்ந்தார். காமா கம்பெனி யென்பது லண்டன், லிவர்பூல் என்னும் இங்கிலாந்திலுள்ள விரண்டிடங்களிலிருக்கின்றது. அங்கே போனபின், இங்கிலாந்திலே மிகப் பெரியோர்களாக வழங்கிவந்த ஜான்ப்ரைட்* ஹென்றிபாஸெட்† ஆகிய இருவருடைய சிநேகத்தை சம்பாதித்துக்கொண்டார். இங்கிலாந்திலுள்ளவர்கள் இந்தியாவின் நிலைமையைப்பற்றி சரியாக அறிந்துகொள்ளும்படி செய்ய நிரம்பப் பாடுபட்டார். நமது நாட்டை நேரே இங்கிலாந்திலுள்ளவர்கள் ஆளமுடியாததலால், அங்கிருந்து தங்கள் பிரதிநிதிகளை யனுப்பி அரசு செலுத்தச் சொல்லுகிறார்கள். இங்கு வருபவர்கள் உள்ளதை யுள்ளபடி இங்கிலாந்தி லிருப்பவர்களுககுத் தெரிவிப்பதில்லை. இவ்விஷயத்தை நௌரோஜி இங்கிலாந்திலுள்ளவர்களுக்கு வற்புறுத்திக் கூறினர். மேலும், இந்தியாவரசாட்சியில், சுதேசிகளுக்கு வெள்ளைக்காரர்களுக் கிருப்பதுபோன்ற பங்கு வேண்டுமென்றார். ஏனெனில் ஜனங்கள் சோக்கம், நடையுடை பாவனையை யறிந்தவர் செய்யு மரசாட்சிதிறமாகவே யிருக்குமல்லவா? இவையொன்றும் தெரியாதவர் அரசாட்சி செய்வது, இரண்டு ஊமையர்கள் பேசிக்கொள்வது போல்தானிருக்கும். ஆகையில், கலெக்டர், சிவில்ஜட்ஜி உத்தியோகம் கொடுப்பதற்காக வற்பட்டிருக்கும் சிவில்சர்விஸ் ‡ பரீக்ஷையை இங்கிலாந்திலும் இந்தியாவிலும் ஏககாலத்தில் வைத்து, இந்தியர்களும் அப்பரீக்ஷையிற் றேறும்படி ஏற்பாடு செய்யவேண்டுமென்றார். இது முடிவில் பயன் படாமற்போனலும், சில இந்தியர்களும் இங்கிலாந்துக்கு வந்து அந்தப்பரீக்ஷைக்குப் படிக்கலாமென்று அரசாங்கத்தார் உத்திரவு கொடுத்தார்கள்.

1864-ம் வருஷம் இந்தியாவுக்கு திரும்பிவந்து சிலமாதங்களில் கிருந்துவிட்டு மறுபடியும் 1867-ம் வருஷம் இங்கிலாந்துக்குச் சென்றார். அங்கேபோய் கீழ் இந்தியாசபை ¶ என்றோர் சபை யேற்படுத்தினர். அச்சபை மூலமாய் இங்கிலாந்திலுள்ளவர்கள் இந்தியா

* John Bright.
† Henry Fawcett.
‡ Civil service.
¶ East Indian association.

வின் விஷயங்களைப்பற்றி அறிந்துகொள்ளும்படியான ஏற்பாடு செய்தார்.

மறுபடியும் 1869-ம்வருஷம் இந்தியாவுக்கு அவர் திரும்பி வந்தபொழுது, அவரை எல்லோரும் குதூகலத்துட னழைத்தார்கள்.

திரும்பியும் இங்கிலாந்துக்குச் சென்று 1873-ம் வருஷத்தில், இந்தியாவின் வரவு செலவு கணக்கைபபற்றி நிரவிசாரிக்க ஒரு சபை ஏற்படுத்தவேண்டுமென்று ஒரு மனுக்கொடுத்தார்.

1874-ம் வருஷத்தில், இநதியா கவர்ன்மெண்டார், பரோடா நாட்டின் நிலையைப்பார்த்ததில் அது மிகவும் ஹீனஸ்திதியிலிருந்தது. அதைச் சீர்திருத்துவதற்கு நல்ல புத்திசாலியும், யாருக்கும் பயப்படாதவருமான வொருவரைத் தேடும்பொழுது, தாதாபாய் நௌரோஜியைத் தேடியெடுத்தார்கள். ஐந்து வருஷங்களுக்கு நௌரோஜி பரோடா திவானாகவிருநது, நாட்டிலுள்ள அசுத்தங்களையெல்லாங் களைந்து, யாவரும் மெய்ச்சும்படி கீர்த்தி சம்பாதித்தார்.

இவர் பம்பாய் நகரப் பரிபாலன சபை அங்கததினர். அதற்கு வரும்போலிருந்த சுமார் ஒரு கோடி ரூபாய் நஷ்டம் வராதபடி செய்தார்.

இச்சமயத்தில், அநேகம் புத்தகங்கள் பதிப்பித்தார். நமது ராஜாங்கத்தார், நமது நாடு மிகவும் செல்வம் நிறைந்த நாடென்ற பொய்யெண்ணங்கொண்டு, பிரஜைகள் தாங்கமாட்டாத வரியைப் போடுகிறார்களென்பதை யறிந்து, "இந்தியாவின் வருமை" என்றோர் புத்தகம் எழுதினார். அதிலே, அசைக்கக்கூடாத கணக்கினால், இந்தியாவின் வறுமையையும், வரியின் அதிகத்தையும் நிரூபிக்கிறார். இங்கிலாந்து இந்தியாவுக்கு கடமைப்பட்டிருக்கும் விஷயங்களைப்பற்றி இன்னொரு புத்தகம் எழுதினார். இந்தியா கிடைத்ததனால் இங்கிலாநது நிரம்பப் பெருமைப்பட்டிருப்பதாலும், இந்திய வீரர்களாலேயே வெள்ளைக்காரர்களுக்கு அநேகம் இராஜ்ஜியங்கள் கிடைத்திருப்பதினாலும், இநதியர்களை வரியால் வருத்தக்கூடாதென்று சொல்லியிருக்கிறார்.

1885-ம் வருஷத்தில் பம்பாய் சட்ட நிரூபண சபை * அங்கத்தினராக நியமிக்கப்பட்டார். 1886-ம் இங்கிலாந்துக்குப் போய் இங்

---

* Bombay Legislative Council.

கிலாந்து பிரதம அரசாங்கசபை §அங்கத்தினராக முயன்றார். ஆனால் அவர் முயற்சி பயன்படவில்லை. ஆனால் அவ்வருஷமே, காங்கிரஸ் ** சபை ஏற்படுத்தியவர்களுள் முக்கியமானவரிவர். 1887 இந்தியாவுக்கு வந்து கல்கத்தாவில் நடந்த சபைக்கு அக்கிராசனாதிபதியாய் வீற்றிருந்து, நாட்டோருக்குப் புத்திமதிகொடுத்தார். திரும்பவும் 1892-ம் வருஷத்தில் பார்லிமேண்ட் அங்கத்தினராக ஸெண்ட்ரல் பின்ஸ்பரி * யார்களால் தெரிந்தெடுக்கப்பட்டார். இங்கிலாந்திலுள்ளவர்களுக்கே பார்லிமெண்ட் அங்கத்தினராவதைவிட பெரிய மரியாதை கிடையாது. முதல் முதல் இந்து தேசத்தவர் இவர்தான் பார்லிமெண்டில் உட்கார்ந்தார். அங்கே நமது நாட்டின் தாழ்ந்த நிலைமையையும் அதிக வரியையும் பற்றி எத்தனையோ தடவை பேசியிருக்கிறார் 1893-ம் வருஷம் இந்தியாவுக்கு வந்து லாகூரில் நடந்த காங்கிரஸ் சபை அக்கிராஸனாதிபதியாக வீற்றிருந்தார். 1895-ம் வருஷம் இவர் வேண்டுகோளுக்கிரங்கி ப்ரிடிஷ் அரசாங்கத்தார் இந்தியாவின் வரவு செலவைப்பற்றி விசாரிக்க ஒரு சபை ‡ யேற்படுத்தி, நௌரோஜியையும் அதன் அங்கத்தினர்களுள் ஒருவராக நியமித்தார்கள்.

இவருடைய வாழ்நாள் முழுதும் இந்தியா ஜனங்களின் பொது நன்மைக்காகவே உழைத்து வந்திருக்கின்றனர். இவர் தனக்குக் கிடைக்கக்கூடிய அநேகம் உயர்ந்த பட்டங்களை யெல்லாங் கவனியாது, தனக்கு அநேக சமயங்களில் நேரிட்ட திரவிய நஷ்டங்களையுங் கவனியாது, பொது நன்மைக்குப்பாடுபடுவதே தன் புருஷார்த்தமெனக் கருதி 77 வயதாகியும் இருபது நாட்களுக்கு முன் லண்டனில் ஒரு சபையில் அக்கிராசனம் வகித்தார். நமது நாட்டிலிருந்து தென்னாபிரிகாவுக்கு அநேகர் பிழைப்புக்காகப் போயிருக்கிறார்கள், அநேகர் கூலிவேலைக்காரர்கள். மற்று சிலர், வைத்தியர்களாயும், வக்கீல்களாயும், இருக்கிறார்கள். தென்னாபிரிகாவிலேயே ஐரோப்பாவிலிருந்து அநேகம் வெள்ளையர்களெல்லோரும் ஒன்று சேர்ந்து இந்தியர்களெல்லோரும் ஊர்களின் எல்லைக்குள் வசிக்கக்கூடாதென்றும், அவர்கள் வண்டியோடும் வழியிலேதான் நடக்கலாமென்

§ British Parliament
* Central Finisbury.
‡ Welby Commission.
** Indian National congress.

இந்தியர்க ளெல்லோரும் ஊர்களின் எல்லைக்குள் வசிக்கக்கூடா தென்றும், அவர்கள் வண்டிபோகும் வழியிலேதான் நடக்கலா மென்றும், புகைவண்டியில் உயர்ந்த வண்டிகளுக்குள் ஏறக்கூடா தென்றும், இவர்கள் குழந்தைகள் ஏற்பட்டிருக்கும் பள்ளிக்கூடங் களில் வாசிக்கக்கூடாதென்றும் இன்னும் அநேகம் கடுமையான விதிகளை யேற்படுத்தியிருக்கிறார்கள். இவற்றையெல்லாம் நிவர்த் திக்கும்படி ராஜாங்கத்தாரை வேண்டிக்கொள்ள அச்சபைக்கூட்டம் நடந்தது.

இவருடைய முக்கியமான கொள்கைகள் என்னவென்றால்:— 1. இந்தியா நிரம்பவும் ஏழைத்தேசம்; 2. ராஜாங்கத்தார் அதை அதிகவரிபோட்டு வருத்துகிறார்கள். 3. சில அநீதங்கள் இராஜ ஜியத்தில் நடப்பதற்குக்காரணம் இந்தியர்களை அதிகமாய் உயர்ந்த வேலையில் நியமிக்காதிருப்பதுதான். 4. வரியையெல்லாம், பிர ஜைகளின் சுகத்திற்காக செலவழியாது, ஒரு சமுத்திரம்போன்ற சைன்னியத்தைவைத்து அதன்பொருட்டு ஏழைகளின் பொருளை யெல்லாஞ் சிலவழிப்பது சரியென்று; என்பவைதாம்.

1. இந்தியா நிரமபவும் ஏழையானதேசம். இதற்கு வெள் ளைக்காரர், இவரைப் பைத்தியமென்கிறார்கள். ஏன்? வெள்ளைக்காரர் வருவதற்குமுன் சட்டையுண்டா? மாடவீடுகளுண்டா? சென்னை, பம்பாய், கல்கத்தாமுதலிய பெரிய ஊர்களுண்டா? இவற்றிற்கெல் லாம் நௌரோஜி பின்வருமாறு பதிற் சொல்லுகிறார். இதற்கு முன் சட்டையில்லைதான். இந்தமாதிரி மாடவீடுகளு மில்லை. பெரியபட்டணங்களும் சிலர் இருந்தனவென்று சொன்னபோதி லும், இல்லையென்றே வைத்துக்கொள்ளுவோம். இவையெல்லா மிருப்பது நாட்டின் செல்வத்தைத் தெரிவிக்கிறதோ? ஒருவன் தன் வயிற்றை நிரப்புவதற்காக வைத்திருக்கும் தான்யத்தை விற்று மாடவீடுகட்டினு லென்னபயன்? அநேகமாதிரி ஹிந்து ஜனங்கள் வெள்ளைக்காரர்களால் இங்கு கொண்டுவரப்பட்ட சாமான்களால் மயக்கப்பட்டு, தாம் கொடுக்கும் விலையில் நான்கிலொருபங்குகூடப் பெறாத சாமானை வாங்கிப்பொருளைப் பறிகொடுக்கின்றனர். எத் தனையோ குடும்பங்கள் இம்மாதிரிகெட்டுப் போயிருக்கின்றன. நாட் டிற்செய்யப்பட்ட சாமான்களை வாங்கினால், எல்லோருக்கும் சுகம். அப்படியிருக்க வெள்ளைக்காரர்களது சாமான்களை வாங்கினால், நாட்

டில் அச்சாமானைச் செய்பவர் பட்டினிகிடப்பதுடன் பொருளும்
நாட்டைவிட்டு வெளியேபோகிறது. மேலும் இரண்டு இந்தியாக்
களிருக்கின்றனவென்றார். ஒரு இந்தியா செல்வமுள்ளது—வெள்ளை
க்காரர் இந்தியா-ஒரு இந்தியா-தரித்திரம்-இந்தியா இந்தியா. அதா
வது இந்தியாவுக்குவந்து ஏழைகளின் பணத்தைக்கொண்டு வெள்
ளையர்கள் தாம் சுகப்படுகிறார்களென்கிறார். ஏனெனில், வியாபார
மெல்லாம் அவர்கள் கையிலேயே யிருக்கின்றது. கடுதாசி, அணி
பேறு முதற்கொண்டு அவர்களிடமிருந்து நாம் வாங்கவேண்டி
யிருக்கிறது. அவர்களிடம் இயந்திரங்க ளிருக்கின்றன. இயந்தி
ரங்களின் உதவியால், சாமான்களை மிகவும் தாழ்ந்தவிலைக்குக் கொ
டுக்கிறார்கள். அவர்களோடு நம்மால் போட்டிபோட முடியவில்லை.
ஆனால், சில வருஷங்களுக்கு முன் பம்பாயில் அநேகம் இய
ந்திரங்கள் துணி நெய்வதற்கு ஏற்படுத்தப்பட்டன. அவை
சீர்மை சரக்குடன் போட்டி போட்டபொழுது, வெள்ளையர்
கள் அநேகங் கடுஞ்சட்டங்களால், பம்பாய் வியாபாரத்தைக் கெடுத்
தார்கள், இதனால் வெளியாகிறதென்னவென்றால், அவர்களுடன்
நாம் போட்டிபோட அவர்கள் மனங்கொள்ளவில்லையென்பதும், அ
வர்கள் சாமான்களையே நாம் என்றைக்கும் வாங்கவேண்டுமென்
பதும்தான். இப்படிவியாபாரத்தினால் வருஷாவருஷம் எத்தனையோ
கோடிரூபாய் நமது நாட்டைவிட்டு வேறு தேசங்களுக்குப்போய்க்
கொண்டிருக்கிறது. இருநூறு வருஷங்களாக போய்க்கொண்
டிருக்கிறது. இருநூறு வருஷங்களில் குறைந்தபக்ஷம் வருஷத்
துக்கு நூறுகோடி ரூபாய் வைத்தாலும், அளவிடக்கூடாத திரவி
யம் நாட்டைவிட்டு வெளியே போயிருக்கிறதல்லவா? மேலும் வரு
ஷாவருஷம் 80 கோடி ரூபாய் வரியில் வசூலாகிறது. முக்கால் பங்
குக்குமேல் அந்தத்திரவயமும் வெள்ளைக்காரர்களுக்கே கொடுக்
கப்படுகிறது. வெள்ளைக்காரர்களோ இங்கு வசிப்பதில்லை. கழுகு
முதலிய பறவைகள் தம்மிருப்பிடம் விட்டு வேறு இடங்களிலிரை
யைச் சம்பாதித்துக்கொண்டு தம்மிடத்திற்குப்போய் விடுவது
போல, வெள்ளைக்காரர்கள் சிலவருஷங்களிலிருந்து திரவியத்தைத்
திரட்டிக்கொண்டு தம்மூர்போய்ச் சேருகிறார்கள். இப்படி இரு
நூறு வருஷங்களாக நடந்துகொண்டிருக்கும்பொழுது இந்தியா
எப்படி ஏழையாயிராது? ஆகவே அடிக்கடி பஞ்சங்கள் உண்டா

கிக்கொண்டிருக்கின்றன. இராஜாங்கத்தார் காப்பாற்றுகிறார்கள். ஆனால் பஞ்சம் வருவதற்குக்காரணம் அவர்கள்தாமே?

(2) வரி அதிகம். இதற்கு நமது அரசாங்கத்தார் நம்மை முன்னாண்ட ஹிந்து மொகலாய அரசர்கள் வாங்கியதைவிடக்குறை வாகவே நாங்கள் வாங்கிக்கொண்டிருக்கிறோம் என்கிறார்கள். இது வே. அவ்வளவு சரியான விஷயமன்று. ஏனெனில் ஹிந்து தர்மசாஸ் திரங்களில் ஆறிலொருபங்குதான் வரிவாங்கலாமென்று சொல்லி யிருக்கின்றது. ஆயினும் இவர்கள் சொல்லியதையே சரியாகக் கொள்ளுவோம். முன்னிருந்த வரசர்களே அதிகமாக வரிவாங்கி யிருக்கட்டும். அவர்கள் நாட்டினுள்ளேயே யிருந்து விட்டார்கள். வரியைவாங்கி இந்தியாவிலேயே தானே செலவழித்தார்கள்? இந்தி யர்களுக்கே தானே பலவிதமாகத் திருப்பிக்கொடுத்தார்கள்? நமது அரசாங்கத்தாரோ? இந்தியர்களிடம் வாங்கி, இங்கிலாந்திலுள்ள, அல்லது இங்கிலாந்துக்கு சீக்கிரம் திரும்பிப்போகு மவர்களுக்குக் கொடுக்கிறார்கள். ஆதலின் வரி அதிகமாகிறது. எப்படியென்றால், நாட்டின் செல்வம் குறையக்குறைய, வரியும் குறையவேண்டுமல்ல வோ? 1000 கோடி ரூபாய் சொத்திருக்கும்பொழுது 50 கோடி வரிவாங்குகிறார்கள். 50 கோடி இங்கிலாந்துக்குப்போய்ச் சேரு கிறது.பாக்கியிருப்பது 950 கோடி.மறுபடியும் வரி 50-கோடி; அது ஊர்போய்ச்சேருகிறது. பாக்கி 900 கோடி. அதற்கும் 50கோடியே தான் வரி. இவ்வுதாரணத்தைக்கொண்டு வரி அதிகமாகிக்கொண்டே வருகிறதென்றறியலாம். ஆனால், மற்றைய முன்னிருந்த அரசாட்சிக ளிலோ, இவர்கள் சொல்லியபடி வரி அதிகமாக விருந்தபோதிலும் இராஜ்ஜியத்தின் மொத்தமானசெல்வம்குறைவுபடாமலேயிருந்தது. ஆனால், வெள்ளைக்காரர்கள் பொருளைக்கொண்டு வந்து இங்கே புகைவண்டிப்பாதை முதலியன போட்டிருக்கிறார்களே யென்றால்? அப்படி அவர்கள் இங்கே போட்டிருக்கும் பொருள் மிகச் சுவல் பம். அதன் வட்டியையும் அவர்களே எடுத்துக்கொள்ளுகிறார்கள், ஆதலின் பொருள் நாட்டைவிட்டுப் போய்க்கொண்டிருக்கும்பொ ழுது வரி அதிகமாகாமலிருந்தாலே கடுமையாகிறது. அப்படி யிருக்க, நமது அரசாங்கத்தார், வரியை வருஷாவருஷம் உயர்த்திக் கொண்டேவருகிறார்கள். ஆதலின் வரியானது எவ்வளவு கடுமை யாய் நமது நாட்டோரைத் தாக்குகிறதென்பதை, இதை வாசிப்ப.

வர்களை யழிந்துகொள்ளலாம், ஆனால், எங்கள் அரசாட்சிக்குமுன் நீ பயமில்லாமல் தெருவே நடக்கலாமா? நீ பயமில்லாமல் சொத்து வைத்திருக்கலாமா? என்று கேட்டால்? "நீங்கள் சொல்லுவது நியாயம்தான். உங்கள் அரசாட்சி முழுவதும் கெடுதலென்று நான் சொல்லவில்லை. அநேகம் நன்மைகள் நீங்கள் செய்திருக்கின்றீர்கள். ஆனால், எங்களுக்கு சுகவாழ்க்கைககு வேண்டிய பொருளை மாத்திரம் அபகரித்துக் கொண்டுபோய் விடுகிறீர்கள்" என்று தாதாபாய் நௌரோஜீ பதிற் சொல்லுகிறார்.

(3) இந்தியர்களை உயர்ந்த வேலையில் நியமிப்பது. அரசாட்சியென்பது எப்பொழுது சரியாய் நடக்குமென்றால்? அரசாட்சி செய்பவர்கள் பிரஜைகளுடைய நடை, உடை, பாவனை முதலியவற்றையெல்லாம் நன்றாகத் தெரிந்தவர்களாகவே யிருக்கவேண்டும். அப்பொழுதுதான் அது சரியாய் நடக்கும். ஆனால் அவ்விதம் நமது நாட்டில் முழுதுமிருப்பது அசாத்தியம். ஆகையால், வெள்ளைக்காரர்களைப்போன்று சுதேசிகளும் உயர்ந்த வேலையிலிருக்கவேண்டும். அப்பொழுது கூடுமானவரையில் அரசாட்சி தவறாமலிருக்கும்படி பார்த்துக்கொள்ளலாம். சில வகீதங்கள் நடப்பது ஒருவரையொருவர் வெள்ளையர்களும் ஹிந்துக்களும் அறிந்துகொள்ளக் கூடாததனால்தான்.

(4) சைனியம் அதிகம்; செலவு அதிகம். அதைப்பற்றி, வெள்ளைக்காரர்களா லாளப்பட்டுவரும் நாம் பேசுவதற்கு அசக்தர்களானாலும், சற்று நியாயத்தைப் பார்ப்போம். அவர்கள் சம்பாதித்த நாட்டைக் காப்பாற்றவேண்டியது அவசியம் தான். ஆனால் குடிகள் வருந்தாதபடி பார்த்துக்கொள்ளவேணடியது அவசியமன்றோ? சேனை அதிகமென்று அவர்களே ஒத்துக்கொள்ளுகிறார்கள். இந்தியாவின் எல்லையைக் காப்பாற்றுவதற்காக வைத்திருக்கும் சேனையின் சிலவைக்கூட இந்தியர்கள் கொடுக்கவேண்டுமென்றால்? ஆதலின் இந்தியாவின் சைனியச் செலவின் ஒருபாகத்தை இங்கிலாந்து வஹிக்கவேண்டும். மேலும் இவ்வளவு பெரியசேனை இந்தியாவிலிருக்கவேண்டய அவசியமேயில்லை. ஏனெனில் சைனியபலத்தினால் இந்தியா இங்கிலீஷ் ஆளுகைக்குளில்லை. ஜனங்களெல்லோரும் கிளம்பினால் சைனியம் என்ன செய்யமுடியும்? பிரிடிஷ் அரசாங்கத்தாரிடமிருந்து எப்பொழுதும் நியாயம் கிடைக்கும், அதுவே நம

க்கு நல்ல அரசாங்கம், ஆதலின் நாம் அதற்குட்பட்டிருக்கவேண்டு மென்ற எண்ணத்தினாலன்றோ அவர்கள் சும்மா விருக்கிறார்கள்? என்றும் சொல்லியிருக்கிறார். ஆப்கானிஸ்தான் யுத்தம் நடந்தபோது கொஞ்ச சிலவு இங்கிலாந்து பொறுக்கும்படி செய்தவர் இவர் தான்.

இவ்வண்ணம் யாவருக்கும் நல்லவராயிருந்து பாடுபட்டு வரும் பெரியர் இப்பொழுது லண்டன் பட்டணத்தில் வசித்துக்கொண் டிருக்கிறார். இவர் அங்கே வியாபாரியா யிருந்துகொண்டிருக்கிறார். கொஞ்சநாட்களுக்கு முந்தி தாம் பார்லிமெண்ட் சபையில் அங்கத் தினராக முயற்சிசெய்யப்போவதா வெளியிட்டிருக்கிறார். இப்பெரி யோர் நெடுங்காலம் வாழ்ந்திருந்து தம் நற்செயலைச் செய்துவரக் கடவுள் அநுக்கிரகிக்கவேண்டுமென்று பிரார்த்திக்க வேண்டியது நமது கடமை.

ரா. ராஜமையங்கார்.

வியாபாரம்.

——(*)——

வியாபாரமென்பது பொதுவாய் சரக்கு விற்றலுக் கேற்பட்ட பதமாயிருந்தபோதிலும், ஒரு நாட்டோடு மற்றொரு நாடு செய்யும் விற்றல் வாங்கல் முதலியவற்றிற்குத்தான் அது பெயராகும்.

மனிதருக்கு அவசியமாக அநேகம் சாமான்கள் வேண்டியிருக்கிறது. சாதாரணமாய் அரிசி, உப்பு, புளி, மிளகாய், துணி, கடுதாசி, பேனா, முதலியன வேண்டியிருக்கிறது. அரிசி உள்ளூரிலேயே அகப்படும். புளியும், மிளகாயும் சில ஊர்களில்தான் கிடைக்கும். மற்ற ஊர்க்காரர்கள், பணங்கொடுத்தாவது, அல்லது ஊரில் விளையும் அரிசியைக் கொடுத்தாவது புளி வாங்கிக்கொள்ளவேண்டும். துணி இங்கிலாந்தில் செய்யப்படுகிறது. அதை நாம் பணங்கொடுத்து வாங்கவேண்டும். இம்மாதிரியே ஒரு ஊரிலேயேயுள்ள சாமான்களை வைத்துக்கொண்டு அவ்வூரார்கள் காலம் தள்ளமுடியாது. அவசியமாய் மற்ற ஊர்களிலிருந்து சாமான்கள் வரவழைக்கவேண்டியிருக்கிறது. ஒவ்வொருவரும் தங்கள் தங்களுக்கு வேண்டியவளவு சாமான் வரவழைத்துக்கொள்ளக்கூடாதோவென்றால்? அது எல்லோருக்கும் தொந்தரவைத்தான் விளைவிக்கும். ஆனால் யாரோ வொருவன் அத்தொழிலை வைத்துக்கொண்டு மற்றவர்களுக்கு அச்சாமான்களையே விற்றுவருவானாகில், அவனுக்கும் இலாபம் கிடைக்கும்; ஊரிலுள்ளவர்களுக்கும் அது நன்மையையே தரும் ஆதலின், எவ்வூரிலும் வியாபாரிகள், அவ்வூர்களின் நன்மையை உத்தேசித்து, இருக்கவேண்டியது அவசியம்.

சமீபத்திலேயே, சாமான்களை ஒருவரிடமிருந்து மற்றொருவருக்கு வாங்கிக்கொடுப்பதுபோல்தான், தூரதேசத்திலிருக்கும் சாமான்களை இத்தேசத்திலிருப்பவர்களுக்கு வாங்கிக்கொடுப்பதும், இவ்வூர்ச்சாமான்களை வேற்றூரார்களுக்கு வாங்கிக்கொடுப்பதும். ஆனால், இதிலே யதிக கஷ்டங்களிருக்கின்றன. முதலாவது தூரம் அதிகமாகிறபடியால், சாமான்களை ஓரிடமிருந்து மற்றோரிடத்துக்குக் கொண்டுவந்து சேர்ப்பது கடினம். இரண்டாவது வியாபாரஞ் செய்யுமிருவரும் பாஷை, குணம், சீதோஷ்ணங்களால் வேறு

பட்டிருக்கிறார்கள். மூன்றாவது, நிறை அளவு, வியார நீதி முதலியன ஒன்றோடொன்று மாறும். நான்காவது, போட்டியினால், அநேக விரோதங்கள், சண்டைகள், முதலியன ஏற்படும்.

இம்மாதிரி சரக்கை மாற்றிக்கொள்ளுவதினால், தொழில் சரியாய் நடப்பதுடன், அந்தந்த சரக்குகள் அந்தந்த ஊர்களில், நன்றாக விருத்திசெய்யப்படும். மனிதர் தனித்தனியாய் ஒன்று சேராமலிருந்துகொண்டு அந்தந்த ஊருக்குவேண்டிய சரக்குகளை அவரவர்களே செய்துகொண்டு வாழ்ந்துவருவாரேயாகில், வியாபாரமென்பதேயிராது; வியாபாரம் விருத்தியாகாதவரையில், கொஞ்சமாயும், அரிதாயுமிருக்கும் சிலவகைச் சரக்குகளை வைத்துக்கொண்டே அந்தந்த ஊரார்கள் காலங்கழிக்கவேண்டும்.

வியாபார விருத்தியினால் தொழில் சரியாய் நடக்கும். ஓர் உதாரணம் எடுத்துக்கொள்ளுவோம். ஒருவன் தனக்குவேண்டிய வளவு அரிசி பயிரிட்டு சம்பாதித்துக்கொள்ளவேண்டும்; துணியை நெய்துகொள்ளவேண்டும்; வீட்டை கட்டிக்கொள்ளவேண்டும். எல்லாம் ஒரேமாதிரி ஒருவனுக்கே தெரிந்திருப்பது அசாத்தியம். ஆதலின் யாதாமொருவேலை தவிர மற்றவையெல்லாம நன்றாகவேயிராது. அல்லது ஒன்றுமே நன்றாகவேயிராது. ஆனால், ஒரு கூட்டத்தார் துணியையே நெய்துகொண்டிருப்பார்களேயாகில், அவர்கள பழக்கத்தினால் விரைவில் வேலையைச் செய்துமுடிப்பார்கள். அவர்கள் தங்களுக்கு வேண்டியனவற்றைத் தவிர மற்றவற்றை விற்றுவிடுவாரேயாகில், வீடு முதலியனவற்றைச் சம்பாதித்துக்கொள்ளலாம். இம்மாதிரியே, வீடுகட்டத் தெரிந்தவனொருவன் பயிரிடுவதில் தான் சம்பாதிப்பதைவிடப் பதின்மடங்கு அதிகப் பழக்கத்தினால், ஒரே வேலையைச் செய்துவருவானேயாகில், சம்பாதித்துவிடுவான். மற்றவற்றையெல்லாம் வீடுகட்டிக்கொடுப்பதினால் வரும் பொருளைக்கொண்டு சம்பாதித்துக்கொள்ளலாம். இப்படியே, பயிரிடுவோனுக்கும் சொல்லலாம்.

நாம் நன்றாகயோசித்துப் பார்த்தால், யார்யாருக்கு எதெதில் புத்திசெல்லுகிறதோ அதனில் தான் தேர்ச்சியடைவார்களென்பதை யறியலாம். இன்னும் ஒருவனை அநேக விஷயங்களில் நன்றாகத் தேர்ச்சியடைந்திருப்பது அசாத்தியம். சாதாரணமாய் ஒருவனுக்கு

ஒருவிஷயம் நன்றாகத்தெரிந் திருப்பதனுடன் கூட மற்றவிஷயங்க ளைப்பற்றியும் அவனுக்குக் கொஞ்சம் கொஞ்சம் தெரிந்திருக்க லாம். அப்படியல்லாமல், அநேகவிஷயங்களை யறிந்தவன் ஒன்றை யும் நன்றாக வறிந்தவனாகவே யிருக்கமாட்டான். இப்படியேதான் வியாபாரத்திலும். ஒரு ஊரின் சீதோஷ்ணம், மண்முதலியன ஒரு தானியத்தையே தான் வளரச்செய்ய இடங்கொடுக்கும். அவ்வூரார் கள் அத்தானியத்தை நிரம்பச் சிரமப்பட்டு வளர்க்கச்செய்ய வேண்டியதுதான். அவர்கள் தங்களுக்கு வேண்டிய மற்றதானி யங்களை விதைத்தால் அவர்களுக்கு இலாபமில்லாமற் போவது டன் நஷ்டமும் வந்துசேரும். ஆதலின் அவர்கள் ஊரில் விளையும் தானியத்தின் ஒரு பாகத்தை தமக்குவேண்டிய மற்றதானியத் தோடு மாற்றிக்கொள்ள வேண்டும்; அல்லது, அதை விற்று, மற்ற தானியங்களை கிரயத்துக்குக் கொள்ளவேண்டும். இன்னொரு உதார ணம். மேற்கூறிய உதாரணத்தில், அவர்களே செய்துகொள்ளக் கூடிய விஷயத்தைப் பற்றிச் சொன்னோம். இப்பொழுது இவர்களே செய்து கொள்ளக் கூடாத விஷயத்தைப் பற்றிச் சொல்லுவோம். அதாவது நாமெப்பொழுதும் கடுதாசிவேண்டு மானால், என்னசெய்யலாம்? கடுதாசி நம்மாற் செய்யமுடியாது; இயந்திர சகாயத்தினால் இங்கிலீஷ்காரர்கள் கடுதாசிசெய்து மிகவும் தாழ்ந்த விலைக்கு விற்கிறார்கள். நாம் ஒரு வேளை அதைச் செய்யப்புகுந்தாலும் இப்பொழுது அதை அவாகள் கொடுக்கும் விலைக்குக் கொடுக்கமுடியாது. ஆதலால், இலாபத்தை உத்தே சித்து அக்கடுதாசியையே வாங்கிக்கொள்ளவேண்டும். நம் தேசத் தில் உண்டாகும் தானியங்களோ, மற்றெந்த சாமான்களோ, வெள்ளைக்காரர்களுக்கு வேண்டியதில்லை. ஆதலின் நம்மூர்சாமான் களை நம்மூரிலாவது மற்றெந்த ஊரிலாவது விற்று, அதைக் கொண்டு கடுதாசியை வாங்கிக் கொள்ளவேண்டும். இப்படி நாம நடந்து கொண்டால் தான் யாவரும் சுகமாய் வாழ்ந்திருக்கலாம். இதையுத்தேசித்தே தான் ஹிந்துமதத்தை விருத்திசெய்து வந்த பெரியோர்கள் ஜாதிக்கு ஜாதி தொழில்கள் ஏற்படுத்தினார்கள். அப்படி யேற்படுத்தின படியினாற்றான் சுமார் 400 - வருஷங்களு க்கு முன் நமது இந்தியாவின் சரக்குகள் உலகம் முழுவதும் பரவி

யிருந்தது. பின்னர் அநேகங் கலகங்களினாலும், அயல்நாட்டோர் படையெடுத்ததாலும், இயந்திர மில்லாமையாலும், இந்தியர்களின் வியாபாரம் குறைந்துபோயிற்று. இன்னமும் இவர்கள் கையாற் செய்யும் வேலையைப்போல், எவ்வளவு உயர்ந்த இயந்திரமும் செய்யமுடியாது. டேக்கா வில் செய்யும் மஸ்லினைப்போன்ற துணி உலகத்தில் வேறெங்கும் நெய்யப்படவில்லை. இப்பொழுதும் இங்கிலாந்தில் ஓரோர் ஊர்க்காரர்கள் ஓரோர் வேலையையே தான் செய்துவருகிறார்கள். அவர்களுக்கு மற்றெந்த வேலையும் செய்யத்தெரியாது. ஆனால் அவர்களைப்போன்று அந்தவேலையை வேறெவருஞ் செய்யமாட்டார்கள்.

வியாபாரத்துக்கு அவசியமாக வேண்டிய சாதனங்களெவை?
(1) ஒரு ஊரிலிருந்து மற்றொரு ஊருக்குச் சாமான்களை கொண்டுபோவதற்கு சௌக்கியமான ஏற்பாடுக ளிருக்கவேண்டும். முன்காலத்தில், நம்மிந்தியாவில் புகைவண்டி கிடையாது. அப்பொழுது அந்தந்த ஊர்களிலுண்டான சாமானகள் அந்தந்த ஊர்களிலும் அதனதற்குச்சமீப ஊாகளிலும் விலைபோய்க்கொண் டிருந்தன. ஆதலின் அவற்றினுடையசரியானபொருமானம்ஒருவருக்குந்தெரிவதில்லை. மற்றோர் ஊரில் விளையும் மற்றொரு சாமானும் அப்படியே அவ்வூரைவிட்டு வெளியே வருவ தில்லை. ஆனால், இவ்வூர்களைவிட்டு வெளியே போவதென்றாலோ, அநேகம் கஷ்டங்களுடன் அங்கே போகும் பொழுது மிகவும் உயர்ந்த விலைக்கு விற்கும்படியாக நேரிடுகிறது. முப்பது வருஷங்களுக்கு முன் தஞ்சாவூரிலிருந்து சென்னைக்கு வரவேண்டுமென்றால் பதினைந்து நாட்களாகும். ஒருநாளைக்கு ஒருரூபாய் வண்டிச் சத்தமானாலும் ஒருவர் போவதற்கு 15ரூபாயிற்று. இப்பொழுதே பத்துமணியில் மூன் றுரூபாய் செலவுடன் தஞ்சாவூரிலிருந்து சென்னைக்குச் சௌக்கியமாய்ப் போய்ச்சேரலாம். புகைவண்டி ஏற்பட்டதனால் இவ்வளவு சீக்கிரமாய் ஒரு ஊரிலிருந்து மற்றொரு ஊருக்கு நாம் போய்ச்சேர முடிகின்ற தானதால், வியாபாரம் அதிகமாய் நடக்குமென்ப தற்குத் தடையென்ன? இதற்குமுன் இங்கிலாந்தி லிருந்து இந்தியாவுக்கு வர இரண்டரை மாதங்களாகும். இப்பொழுது பதினைந்து நாட்களில் வந்துசேரலாம். அதாவது அதிகநாட்கள் பயணத்திலிருப்பதால் வரும் தொந்தரவுகளெல்லாங் கழிந்தன, ஒருஊரிலிருந்து மற்றொரு ஊருக்கு

சரக்கு கொண்டுபோவதற்கு கூலி முன்னைவிட பதின்மடங்கு இப்பொழுது குறைந்திருக்கிறது.

மேலும், தந்தியின் உபயோகத்திற்கு அளவேயில்லை. இப்பொழுது உலகத்திலுள்ள ஒவ்வொரு சாமான் விலையையும் எப்பாகத்தி லிருப்பவரும் வேண்டுமானால் தெரிந்து கொள்ளலாம். அதனால் அளவிறந்த இலாபம் உண்டு. எப்படியென்றால்; அமெரிக்காதேசத்தில் மண் எண்ணெய் ஏராளமாகவிளைந்தது. இந்தியாவுக்கு ருஷியாதேசத்தி லிருந்து எண்ணெய் இங்கிலீஷ்காரர்களால் கொண்டுவரப்பட்டது. அவர்கள் ஒருகாலன் * ஐந்து அணாவீதம் விற்றார்கள் அமெரிக்காதேசத்து வியாபாரிகளுக்கு இச்சமாசாரம் தந்தி வழியாய் எட்டிற்று. உடனே அவர்கள் ஒரு கப்பல் நிறைய எண்ணெய் போட்டுக்கொண்டு வந்து இங்கே நான்கணாவீதம் விற்கத் தொடங்கி யிருக்கிறார்கள். இம்மாதிரி ஓரிடத்தில் உண்டாகும் சாமானை, தந்தி வழியாக மற்ற ஊர்களிலதன் விலையையறிந்து, அவ்வவ்விடங் கொண்டுபோய் விற்கலாம்.

மறுபடியும், ஊரினுள்ளே புகைவண்டி எவ்வளவு உபயோகமோ, அதைவிடப பதின்மடங்கு உபயோகமுள்ளது புகைக்கப்பல் புகைக்கப்பலி லிருந்து கொண்டு அநேகமாய் நிர்ப்பயமாயிருக்கலாம்; சீக்கிரமும் ஒருஊரிலிருந்து மற்றோரூர்போய்ச் சேரலாம்.

(2) ஒருவர் நாணயங்களை மற்றொருவர் தடையில்லாமல் வாங்கிக்கொள்ள வேண்டும். எல்லாவூர்களுக்கும் ஒரே நாணயமிருப்பது கடினம். ஒருவன் மற்றோரூரில்போய் வியாபாரம் செய்தால், அவர்களூர் நாணயத்தைக் கொடுத்துத் தானே அவ்வூர் ஜனங்கள் அவன் சாமானை வாங்கிக்கொள்ள முடியும்? இவன் அவ்வூர் நாணயத்தை வாங்கிக்கொள்ள மாட்டேனென்றால் இவனுக்கு எப்படி வியாபாரம் நடக்கும்? இதற்கு அவ்வவ்வூர் இராஜாங்கத்தார்கள் ஏற்பாடு செய்யவேண்டும்.

(3) சாமான்களை வேற்றூர்களுக்குக் கொண்டுபோகும்பொழுதாவது, வேற்றூரி லாவது, ஜாக்கிரதையாய்க் காப்பாற்றிக் கொள்ள ஏற்பாடுக ளிருக்கவேண்டும். இக்காரியங்க ளெல்லாம்

* காலன் என்பது ஒரு அளவு.

இராஜாங்கத்தார் ஒருவருக்கொருவர் செய்துகொள்ள வேண்டியது. இவ்விதமான நஷ்டங்கள் அடிக்கடி நேருமாகில், உலகத்தில் வியாபாரமே நடவாது ஆதலின், வியாபாரிகள் தங்கள் தங்கள் துரைத்தனத்தைக் கொண்டு இவ்வேற்பாடுகள் செய்து கொண்டிருக்கிறார்கள்.

(4) வியாபாரம் உயர்ந்த வளவில் நடக்கும் பொழுது, ஒரு இராஜதானியார் மற்றொரு இராஜதானியாருக்கும், ஒரு நாட்டார் மற்றோர் நாட்டாருக்கும் கடன் கொடுப்பது சஹஜம். இதனால், நாட்டில் வட்டியில்லாமற் கிடக்கும் பணங்களுக்கு வட்டியேற்படும். பணமும் ஒரு சாமானாகவே யாய்விடுகிறது. எப்படியென்றால், ஒரேவூரில் ஒரு சாமானிருந்தால் எப்படி அது அதிக விலை போகாதோ, அல்லது அதன் பொருமானம் எப்படி தெரியாதோ, அப்படியே பணம் நாட்டினுள்ளே யிருந்தால், அதன்பொருமானம் தெரியாது. இன்னும் உலகத்தில் பணமுள்ள தேசங்கள் பணமில்லாத்தேசங்களை உதவிசெய்வதுடன் தாமும் இலாப மடையும். ஆனால் தகுந்த ஜாமீன்கள முதலிலேயே ஏற்படவேண்டும். அதாவது, இரண்டு அரசாங்கத்தாரையும் ஒருவிதமான நிபந்தனை செய்து கொள்ளும்படி செய்தபிறகு தான், வியாபாரிகள் இவ்விதமான கடன்கள் கொடுக்கவும் வாங்கவும் துணியலாம்.

இந்நான்கு சாதனங்கள் முன்காலத்தில் இல்லாத தனால் தான் வியாபாரம் ஓங்கி வளரவில்லை. இப்பொழுதோ இவையெல்லாம் பூர்ணமாக விருக்கிறது. ஆனால், வியாபாரத்தினால் வருங்கேட்டுக்களவில்லை. ஏழைத்தேசங்களை பணக்காரரா யிருப்பவை அழித்து விடுகின்றன. ஒருவருக்கும் கேடுவராமல் வியாபாரஞ் செய்யலாமென்பதற்குத் தடையேயில்லை. ஆனால், மனிதசுபாவம் அவ்வளவு பெருந்தகைமை யுடையதன்று. முதலில் வியாபாரஞ்செய்யப் போவதாகப்போய், பின்பு நாட்டைக் கட்டிக்கொள்ளுவது பலமுள்ள இராஜ்ஜியங்களுக்கு சஹஜமாய்விட்டது. சில வியாபாரிகளின்பொருட்டு எத்தனையோ பெயர்கள் யுத்தத்தில் உயிரைக் கொடுக்கும்படி நேரிட்டிருக்கிறது. இவற்றை யெல்லாம் பற்றி நாம் பேசவேண்டியது அனுவசியம். வியாபாரத்தின் நல்ல பக்ஷத்தைதையே யெடுத்துப் பேசுவோம்.

பின்பு தற்காலத்தில் ஒவ்வொரு நாட்டிலுமுள்ள ஏற்றுமதி இறக்குமதிகளைப் பற்றியும், அவ்வவ்வூரிலுள்ள செல்வங்களின் கணக்கையும், அவ்வவ்வூர் வியாபாரிகள் வியாபாரம் நடத்தும் முறைமையையும், பற்றி விசதமாக எழுதுவோம்.

ம. கிருஷ்ணசாமி.

பின்னைச்செடி.

OPINIONS.

The Madras Mail :—Excellent from the point of view of the contributions to its pages, of the general get up, etc

The Hindu :—They (Editors) seem to have secured a good staff of contributors, many of them well-known for their learning and experience..................presents a very good appearance

இந்து நேசன் :—இப்பத்திரிகைக்கு விஷயங்க ளெழுதுவோர் கல்வித்திறமையிலும் சாஸ்திர வாராய்ச்சியிலும் அநுபவத்திலும் சிறந்தவர்களா யிருக்கிறாகள்.

PRINTED AT THE V. N. JUBILEE PRESS. MADRAS.